# 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொது அறிக்கை

அரச செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளும் வரிக் கொள்கைகளும் அரச கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றதா என்னும் விடயம் குறித்தான மதிப்பீடு

மார்ச் 2021

# 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொது அறிக்கை

## அரச செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளும் வரிக் கொள்கைகளும் அரச கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றதா என்னும் விடயம் குறித்தான மதிப்பீடு

வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம்

மார்ச் 2021

வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் பொருளாதாரக் குழு இவ்வாய்வு அறிக்கையைத் தொகுத்து வழங்குகின்றது. அனுஷன் கபிலன், தினுக் டி சில்வா, லஹிரி ஜயசிங்க மற்றும் உதாஹிருனி அத்தபத்து ஆகியோர் இக் குழுவில் உள்ளடங்கி உள்ளனர். ஆசிரிய உதவியானது தேஷல் டி மெல், நிஷான் டி மெல் மற்றும் வென்யா டி சில்வா ஆகியோரினால் வழங்கப்பட்டுள்ளது.

செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளானது அரச கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றதா என்னும் விடயத்தை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன், வெரிட்டே ரிசேர்ச் நிறுவனமானது கடந்த காலங்களில், அரசாங்க நிதி பற்றிய குழுவின் வரவு செலவுத் திட்ட அறிக்கைகளுக்கு பங்களிப்பு வழங்கி வந்துள்ளது. ஆய்வுகளில் மாறாத தன்மையினை பேணுவதற்காக முடிந்தவரை ஒரே கட்டமைப்பைப் பயன்படுத்தியுள்ளோம்.

Copyright © 2021 Verité Research Pvt Ltd. All rights reserved.

2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொது அறிக்கை : அரச செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளும் வரிக் கொள்கைகளும் அரச கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றதா என்னும் விடயம் குறித்தான மதிப்பீடு / தொகு. அனுஷன் கபிலன்... [ஏனையோர்];
பதி. தேஷால் டி மேல் சக நிஷான் டி மேல். - கொழும்பு : வெரிட்டே ரிசேர்ச், 2021.
ப. 69 ; ச. மீ. 26

ISBN 978-624-5514-15-1

i . 352.48 டிவி 23 ii. கபிலன், அனுஷன் (தொகு.)
iii. டி மெல், தேஷால் (பதி.) iv. டி மெல், நிஷான் (பதி.)

1. நிதி, மக்கள் - இலங்கை
2. வரிவிதிப்பு - இலங்கை
3. வரவு செலவுத் திட்டம் - இலங்கை

ISBN: 978-624-5514-05-2

ஆசியாவில் பேச்சுவர்த்தைகள் மற்றும் கொள்ககளை வகுத்துக் கொள்வதற்கான, தகவல்களை வழங்குவதிலும், பகுப்பாய்வுகளை மேற்கொள்வதிலும், வழிகாட்டும் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்பதனை வெரிட் ரிசேர்ச் நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளதோடு ஆசிய பிராந்தியத்தில் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவது குறித்தான உரையாடல்களையும், கல்விப் பணிகளையும் ஊக்குவித்து வருகின்றது. மேலும் வெரிட் ரிசேர்ச் நிறுவனமானது பொருளாதாரம், சமூகவியல், அரசியல், சட்டம் மற்றும் ஊடகம் போன்ற துறைகள் தொடர்பான ஆய்வுகளையும், கலந்துரையாடல்களையும் மேற்கொள்வதற்குத் தேவையான செயற்திறன் மிக்க பங்களிப்பை வழங்கி வருவதோடு,, தகவல் சேகரிப்பு, தகவல் ஒப்பாய்வு, மூலோபாய மேம்பாடு மற்றும் தீர்மானங்களின் பகுப்பாய்வு சேவைகளையும் வழங்கி வருகின்றது.

பரிந்துரைக்கப்படும் மூலம்: வெரிட்டே ரிசேர்ச் (2021). 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொது அறிக்கைஅரச செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளும் வரிக் கொள்கைகளும் அரச கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றதா என்னும் விடயம் குறித்தான மதிப்பீடு கொழும்பு: வெரிட்டே ரிசேர்ச்.

முக்கிய சொற்கள்: பொது நிதி, 2021 ஆம் ஆண்டு இலங்கை,வரவு செலவுத் திட்டம், கொள்கை முன்னுரிமைகள், செலவின ஒதுக்கீடுகள், வரிக் கொள்கைகள்

இவ்வறிக்கை இலங்கையின் PublicFinance.lk என்னும் ஒன்லைன் தளத்தில் வெளியிடப்படும்.

ஏனைய விடயங்களையும் பகுப்பாய்வுகளையும் இவ்விணையத்தளத்தில் பார்க்கலாம்: http://publicfinance.lk/

கருத்துக்களை மின்னஞ்சல் செய்யவும்: publications@veriteresearch.org

# பொருளடக்கம்


**பிரிவு I: அறிக்கைக்கான அறிமுகம் ........ 4**

பின்புலம் ........ 5

கட்டுப்பாடுகளும் தகைமைகளும் ........ 6

கண்ணோட்டம் ........ 7

**பிரிவு II: துறை ரீதியான நிதி ஒதுக்கீடுகளும் வரிக்கொள்கைகளும் ........ 9**

1. சுகாதாரத் துறை ........ 10

2. பாதுகாப்புத் துறை ........ 15

3. உட்கட்டமைப்புத் துறை ........ 19

4. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை ........ 33

5. சுற்றாடல் துறை ........ 40

6. கல்வித் துறை ........ 45

7. விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் துறை ........ 51

8. சமூகப் பாதுகாப்புத் துறை ........ 60

**பிரிவு III: தகவல் தரநிலைகள் மற்றும் ஏதுநிலை சிரத்தைபிரிவு ஐஐஐ: தகவல் தரநிலைகள் மற்றும் ஏதுநிலை சிரத்தை ........ 65**

1. தகவல் கரிசனைகள் ........ 66

2. ஏனைய கரிசனைகள் ........ 66

3. சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் பலவீனங்கள் ........ 67

# பிரிவு 1
# அறிக்கைக்கான அறிமுகம்

# பின்புலம்

2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமானது, 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17, ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தோடு, அது வரிவிதிப்பு மூலமாக நிதியைத் திரட்டுவதற்கான அரசாங்கத்தின் திட்டங்களையும், குறித்த ஆண்டுக்கான செலவின திட்டங்களையும் முன் மொழிவதாக அமைந்திருந்தது. இத் திட்டங்களானது பொதுநிதி நிர்வாகியின் நிறைவேற்று அதிகாரம் மிக்க முகாமைத்துவத்திற்கான முக்கிய கூறுகளை உருவாக்குகின்றன. ஆகவே வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் வரிக்கொள்கைகள் அரசாங்கத்தின் கொள்கை முன்னுரிமைகளுக்கு ஏற்ப உள்ளனவா என்பதை மதிப்பிடுவது முக்கியமாகும். இந்த அறிக்கை வெரிட் ரிசேர்ச் நிறுவனத்தினால் தொகுக்கப்பட்டுள்ள இவ்வறிக்கையானது, அரசாங்க நிதி பற்றிய பாராளுமன்றக் குழுவின் (COPF) ஆணையை ஒத்ததாகும். 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட முதலாவது அறிக்கையானது, வரவு செலவுத் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட அரச நிதி, நிதி மற்றும் பொருளாதார அனுமானங்களினதும், மதிப்பீடுகளினதும் மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வை வழங்குகிறது.. இந்த மதிப்பீடு முக்கியமாக 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைவு மற்றும் வரவு செலவுத் திட்ட உரையில் முன்வைக்கப்பட்ட செயல்த் திட்டங்களுக்கான மேலதிக ஒதுக்கீடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இந்த மதிப்பீடு பொதுமக்கள் மற்றும் பாராளுமன்றம், நிறைவேற்று நிர்வாகம் உட்பட பிற பங்குதாரர்களுக்கு அறிவிப்பதுடன் மேலதிகமாக பொருத்தமான தகவல்களைப் பெறுவதை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதுடன், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் கட்டமைக்கப்படும் செயல்முறைக்கு நிபுணத்துவம் அளிக்கின்றது. பாராளுமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் மிக்க நிர்வாகி உட்பட பொது மக்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் அறிவிப்பது மட்டுமன்றி, இம் மதிப்பீடானது, தொடர்புடைய தகவல்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் கட்டமைக்கப்படும் செயல்முறையை நிபுணத்துவப்படுத்துவதற்கும் பங்களிப்பு வழங்குகிறது. இதன் விளைவாக, இலங்கையில் மேம்படுத்தப்பட்ட பொது நிதி விளைவுகளுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் குறுகிய காலத்திற்குள் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கட்டுப்பாடுகளும் தகைமைகளும்

இம் மதிப்பீடு சார்ந்த சில தடைகள் மற்றும் தகைமைகள் குறித்து குழு ஆரம்பத்திலேயே குறிப்பிடுகின்றது. முதலாவதாக, இந்த அறிக்கையின் அடிப்படை ஆவணமாக அமையும் என எதிர்பார்க்கப்பட்ட ஆவணமான பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு (அதாவது வரவு செலவுத் திட்டத்தின் முதலாவது வாசிப்பு) அரசாங்கத்தின் கொள்கை ரீதியான வெவ்வேறு முன்னுரிமைப் படுத்தல்களுக்கு வரவு செலவுத்திட்டத்தில் எவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பது தொடர்பான விபரங்களைக் கொண்டிருக்கவில்லை. ஆகவே ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஆய்வினை முன்னெடுக்க முடியாது.

இரண்டாவதாக, நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பின் போது, பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு வரைவில் குறிப்பிடப்படும் எண்ணிக்கை ரீதியான தகவல்களானது வரவு செலவுத்திட்ட உரையின் போது முன்வைக்கப்பட்ட தகவல்களில் இருந்து கணிசமான அளவில் அளவு வேறுபடுகின்றன. எவ்வாறாயினும், அனைத்து அமைச்சுக்களைப் பற்றியும் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்காகவும் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை தொடர்பாகவும் விரிவான செலவு விபரங்களைத் தரும் ஒரே ஆவணமாக உத்தேச வரவு செலவுத்திட்ட வரைவு காணப்படுவதனால் பகுப்பாய்வில் இது பயன்படுத்துகின்றது.

மூன்றாவதாக, குறிப்பிட்ட துறைகளுக்கான செலவினங்களை கண்டறிவது தனிச் சிறப்பு வாய்ந்த சவாலாக விளங்குகின்றது. ஏனெனில், செலவினங்களானது துறைசார் வகைப்படுத்தல்களின் அடிப்படையில் குறிப்பிடப்படாமல் அமைச்சரவை குழுக்களின் அமைச்சுப் பிரிவுகள் சார்ந்த முதலீடுகளின் வரம்புகளாகவே குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் இலங்கையில் அமைச்சுப் பிரிவுகள் நிலையற்றதாகவும், அமைச்சரவை மாற்றங்களின் போது அடிக்கடி மாற்றத்திற்கு உட்படக் கூடியவையாகவும் விளங்குகின்றன.

எனவே எழுத்துருப் பெற்றுள்ள இவ்வறிக்கையானது இத் தடைகளைக் கவனத்தில் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் ஆசிரியர்கள், முடிந்தவரையில், ஒவ்வொரு துறைகளுடனும், அமைச்சுக்களுடனும் தொடர்புடைய கடந்த கால செலவினங்களை முன்வைத்துள்ளனர் எவ்வாறாயினும் நம்பகத் தன்மையுடன் கூடிய, விபரங்கள் கிடைக்காததால் நிதி ஒதுக்கீட்டுக் கட்டளை மூலம் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்ட /ஒதுக்கப்பட்ட மொத்த தொகையைச் சில சரிப்படுத்தல்களுடன் குறைத்தோ அல்லது மிகைப்படுத்தியோ மதிப்பிடப்படலாம்.

# கண்ணோட்டம்

வருடாந்த வரவு செலவுத்திட்டம் தொடர்பான விவாதங்களும், விவாதத்தின் நிறைவில் வரவு செலவுத் திட்டத்தினை ஏற்றுக் கொள்வதும் அரச நிதி முகாமைத்துவத்தில் மிக முக்கியமான நடைமுறையாகும். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புதிய கொள்கைகளையும், நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையில் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் அறிவிப்பதற்கான முக்கியமான சந்தர்ப்பமாக இது விளங்குகின்றது. எவ்வாறாயினும், இத்தகைய திட்டங்கள் ஒவ்வொன்றும், அரச நிதி மீதான நிதிச் செலவினத்தைத் தோற்றுவிக்கும். ஆகவே வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதும் இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான ஒவ்வொரு விடயமும் நாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். சிறந்த ஜனநாயக நடைமுறைகளுடன் கூடிய ஒரு நாட்டில், அரச நிதி முகாமைத்துவ நடைமுறைகளிலும், அவற்றின் வெளிப்பாடுகளிலும் நேர்மைப் போக்குடன் கூடிய திடமான பொதுமக்கள் ஈடுபாட்டைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இவ்வறிகையயானது, அரசாங்கத்தின் செவிலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வரிவிதிப்புக் கொள்கைகளின் தரம்இ நம்பகத்தன்மை மற்றும் முன்னுரிமைப்படுத்தல்களைப் பற்றியும், அவை எந்தளவிற்கு அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க காணப்படுகின்றன என்பதனையும் புரிந்துகொள்வதற்கு, பொதுமக்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் உதவும். இவ்வாறு செய்வதன் மூலம், மேம்பாட்டைத் தரக் கூடிய வகையில் மாற்றங்களை எங்கு செய்ய வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்வதற்கும், தேவையான மாற்றத்தை அடைய அரசாங்கத்தின் நிறைவேற்றதிகாரம் மிக்க நிர்வாகக் குழுவில் ஈடுபடவும் அனுமதிக்கிறது. அறிக்கையின் பிரிவு I ஆனது அறிக்கை குறித்தான கண்ணோடத்தை வழங்குவதோடு, மதிப்பீட்டுடன தொடர்புடைய தடைகள் மற்றும தகைமைகளைப் பற்றியும' குறிப்பாக எடுத்துக காட்டுவதோடு, ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான சாராம்சத்தையும் வழங்குகின்றது. நிதி அறிக்கைகளையும் துணை ஆவணங்களையும் ஆராயும் உறுதியான பகுப்பாய்வானது பிரிவு II மற்றும் பிரிவு III இல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்பானது மேலதிக தகவல்களை வழங்குகின்றது.

பிரிவு இரண்டினூடாக இவ்வறிக்கையானது, அரசாங்கத்தின் கொள்கை ரீதியான பிரதான முன்னுரிமைப்படுத்தல்களோடு தொடர்புடைய, எட்டுத் துறைகளை இனங்கண்டு, பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டமானது கொள்கை ரீதியான பிரதான முன்னுரிமைப்படுத்தல்களுக்கு ஏற்ப உள்ளதா என்பதனை மதிப்பீடு செய்கின்றது. நிதி அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட “தேசிய கொள்கைச் சட்டகம் நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு” என்பதனைப் பயன்படுத்தி ஒவ்வொரு துறைக்குமான கொள்கை கொள்கை ரீதியான முன்னுரிமைப்படுத்தல்கள் இனங்காணப்படுகின்றன.

இவ்வறிக்கையில் பின்வரும் துறைகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன:

1. சுகாதாரம்

2. பாதுகாப்பு

3. உட்கட்டமைப்பு

4. வர்த்தகம் மற்றும் தொழிற்துறை

5. சுற்றாடல்

6. கல்வி

7. விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில்

8. சமூக மேம்பாடு மற்றும் பாதுகாப்பு

இவ்வறிக்கையானது, ஒவ்வொரு துறைக்குமான அரசாங்க செலவினங்கள் மற்றும் வரிக் கொள்கைகளின் போக்கை உற்று நோக்கித் தரவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வுகளையும் அவதானிப்புகளையும் வழங்குவதோடு, பொருத்தமான இடங்களில் கடந்த கால அனுபவங்களைப் பற்றி கலந்தாலோசிப்பதோடு ஏதேனும் தனித்துவமான விடயங்கள் காணப்படுமாயின் அவற்றைப் பற்றியும் குறிப்பாக எடுத்துக் கூறுகின்றது.

அறிக்கையின் மூன்றாவது பிரிவானது, வரவு செலவுத் திட்டத்தின் தககவல் வெளிப்பாடுகளில் "தகவல் தரநிலைகள் மற்றும் தக்க சான்றாதாரங்கள் தொடர்பாக "பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழு (COPF), கொண்டுள்ள அக்கறைகள் மற்றும் பரிந்துரைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றது. அதே தலைப்புகளின் கீழ், 2019 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் முதலாவது அறிக்கையில் பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழு (COPF), இனங் கண்ட அதே அக்கறைகளுடன் இவ்வக்கறைகளும் சேர்க்கப்பட்டுள்ளது. இப் பிரிவானது, பின்வருமாறு இரண்டு பகுதிகளாகக் காணப்படுகின்றது: (1) பொது நிதி தொடர்பான பாராளுமன்றக் குழு (ஊழுீகு), முன்னைய வரவு செலவுத் திட்டம் தொடர்பாகக் கொண்டுள்ள அக்கறைகளை மீளாய்வு செய்தல், (2) சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வரவுசெலவுத் திட்டத்தில் காணப்படும் பலவீனங்கள். இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டின் உத்தேச வரவு செலவுத் திட்ட வரைவு, 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரை, முன்னைய ஆண்டின் உத்தேச வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டறிக்கைகள் என்பவற்றில் இருந்து எடுக்கப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன..

# பிரிவு II: துறை ரீதியான நிதி ஒதுக்கீடுகளும் வரிக்கொள்கைகளும்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச வரவு செலவுத் திட்டமானது, முழுமையான துறை ரீதியான ஒதுக்கீடுகள்∴ செலவுகளை பாராளுமன்றம் மதிப்பிடுவதற்குத் தேவையான விபரங்களை வழங்கவில்லை. மாகாண சபைகள் (மற்றும் உப தேசிய அரசாங்கங்கள்) மேற்கொள்ளப்படும் செலவினங்களானது மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட மொத்த நிதிப் பரிமாற்றங்களாகப் பாராளுமன்றத்திற்கு குறிப்பிடப்படுகின்றதே அன்றி துறை அடிப்படையிலான செலவினங்களின் விபரங்கள் எதுவும் வெவ்வேறாகப் பிரித்து குறிப்பிடப்படாமையே இதற்கான காரணமாகும்.

மேலும், 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்களில் துறை அடிப்படையிலான செலவினங்களின் விபரங்கள் கிடைத்தாலும், 2020 அல்லது 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்களில் துறை அடிப்படையிலான செலவினங்களின் விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனைப் பற்றிய தகவல்களை வழங்கும் பணியை மேற்கொள்வதற்கு, கணக்கியல் ரீதியான வகைப்படுத்தல்களுக்கு இணங்க அமைச்சுக்களின் கீழ் இயங்கி வரும் பலதரப்பட்ட பிரிவுகளின் கீழ் வரும் செலவு விபரங்களை தேர்ந்தெடுப்பதன் மூலம் ஒவ்வொரு துறைக்குமான நிதி ஒதுக்கீட்டை அண்ணளவாக மதிப்பிட வேண்டிய நிலை காணப்படுகின்றது. இப் பகுதியினூடாக நாம் கலந்துரையாடிய ஒட்டு மொத்த ஒதுக்கீடுகள் மற்றும் செலவினத் தொகைகளில் சில வரையறைகளைத் தோன்றுவிக்கக் கூடிய நிலை காணப்படுவதனால் இதொரு முழுமையற்ற முறைமையாகும். நடுத்தர ஒற்றை இலக்க மதிப்பை அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கு ஏற்ப, பணவீக்கம் இரண்டு ஆண்டுகளிலும் 5 சதவீதமாக கருதப்படுகிறது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பங்காக செலவினங்களைக் கணக்கிடுவதற்கு நிதியமைச்சின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கிணங்க உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2020 ஆம் ஆண்டில் 1.5 சதவீதமாகவும், 2021 ஆம் ஆண்டில் 5.5 சதவீதமாகவும் காணப்படுகின்றது. பண வீக்கமானது நடுத்தர ஒற்றை இலக்கப் பெறுமதியைக் கொண்டதாக இருக்க வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்ப்பதற்கு இணங்க் இரண்டு ஆண்டுகளிலும் பணவீக்கமானது 5% என அனுமானிக்கப்படுகின்றது.

# 1. சுகாதாரத் துறை

இப் பிரிவில் குறிப்பிடப்படும் சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீடுகளானது, சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் மத்திய அரசாங்கத்தின் சுகாதார செலவினங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது. சுகாதார அமைச்சானது, (1) சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய, ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு (2) மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு என்னும் இரண்டு இராஜாங்க அமைச்சுக்களைக் கொண்டுள்ளது. சுகாதார அமைச்சு, இரண்டு இராஜாங்க அமைச்சுக்களுக்கு எவ்வாறு செலவினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன மற்றும் புதிய வரவு செலவுத் திட்டங்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் அட்டவணை 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## சுகாதாரத் துறை ஒதுக்கீடு (அரசாங்க செலவினங்களின் விகிதாசாரமாக) 2019 உடன் ஒப்பிடுகையில் சற்றுக் குறைவாகும்

**அட்டவணை 1.1:** சுகாதாரத் துறை செலவினச் சுருக்கம் (பெறுமதிகள் ரூ.பில்லியனில்)

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2020-2021 |
| | உண்மை | திருத்-தப்பட்டது | பாதீடு | |
| **சுகாதாரத் துறை** | 190 | 227 | 235 | **3.2%** |
| *அரச செலவினத்தின் பங்கு* | *6.43%* | *6.41%* | *6.20%* | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *1.3%* | *1.4%* | *1.3%* | |
| சுகாதார அமைச்சு | 188.6 (6.37%) | 159.6 (4.49%) | 159.5 (4.21%) | -0.06% |
| சமூக சேவைகள் திணைக்களம் | 0.6 (0.02%) | 0.6 (0.02%) | 0.7 (0.02%) | 15.8% |
| சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சு | 1.7 (0.06%) | 2.0 (0.06%) | 2.6 (0.07%) | 35.6% |

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 | 2020 | 2021 | 2020-2021 |
| | உண்மை | திருத்-தப்பட்டது | பாதீடு | |
| ஆயுர்வேத திணைக்களம் | 1.7 (0.06%) | 1.8 (0.05%) | 2.2 (0.06%) | 24.3% |
| மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு | வி.கி. | 65.9 (1.86%) | 61.2 (1.61%) | -7.2% |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 11.5 (0.30%) | வி.கி. |

**அடைப்புக் குறிக்குள் வழங்கப்பட்டுள்ள தொகைகள் அரச செலவினத்தின் பங்கான பெறுமதியைக் குறிப்பிடுகின்றன.*


*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

குறிப்பு: 2019 உண்மையான செலவினங்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் 2020 திருத்தப்பட்ட மதிப்பீடுகள் ஏற்கனவே அரசாங்க முகவரக செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் மக்களை மையப்படுத்திய சுகாதார சேவைகள் (ரூ.10 மில்லியன்) மற்றும் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் (ரூ.1.5 பில்லியன்) ஆகியவற்றை உள்ளடக்கியது.

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

## கடந்த காலங்களில் மூலதனச் செலவினம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது

**அட்டவணை 1.2:** சுகாதாரத் துறை செலவினம், ரூ.பில்லியனில், 2015 – 2019




*மூலங்கள்: வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் (பல்வேறு ஆண்டுகள்)*

## சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடுகள் செலவிடப்படுவது குறைவு ஆயுர்வேதம் இன்னும் மோசமாக உள்ளது

**அட்டவணை 1.3**: கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம் / அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவினத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| **சுகாதாரத் துறை** | 9.8% | 15.7% |
| ஆயுர்வேதத் திணைக்களம் | 4.0% | 21.2% |
| சமூக சேவைகள் திணைக்களம் | 5.0% | 9.9% |
| அமைச்சரவையின் பிற ஒதுக்கீடுகள் | 9.9% | 15.6% |

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் (பல்வேறு ஆண்டுகள்).*

### பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்துக்கான சுகாதாரத் துறை ஒதுக்கீடு 235 பில்லியன் ரூபாவாகும். இது அரசாங்க செலவினத்தின் 6.43மூ சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சதவீதத்திற்கும் சமமாகும்.

அதற்கு முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடுகள் 3.2 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதோடு, கடந்த 5 ஆண்டுகளில் வரலாற்று ரீதியான சராசரி வளர்ச்சி 9.8 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு சுமார் 19.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அரசாங்க செலவினங்களின் ஒரு பங்காக சுகாதாரத் துறை ஒதுக்கீட்டினை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவு குறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும், கடந்த காலங்களில், சுகாதார அமைச்சின் ஒதுக்கீட்டை செலவழிப்பதில் அரசாங்கம் மோசமான வரலாற்றைக் கொண்டுள்ளது. மீண்டெழும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் மூலதனச் செலவினங்களுக்கான செலவீடுகளிலேயே மிகப் பெரிய வேறுபாடு காணப்படுகின்றது. உத்தேசச் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் வருடாந்த செலவினங்களின் வேறுபாடானது சராசரி மதிப்பீட்டில் 15.7 சதவிகிதமாகக் காணப்படுவதோடு, ஆயுர்வேத திணைக்களத்தின் உத்தேசச் செலவினங்களிலும் பார்க்க நடைமுறைச் செலவினங்கள் பெரிதும் குறைவாகக் காணப்படுகின்றது.

## அரச கொள்கையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் அரசாங்கம் குறிப்பிட்டுள்ள அனைத்துக் கொள்கைகளுக்கும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், ஒரு சில சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை. சுகாதாரத் துறைக்கான குறிப்பிட்ட கொள்கை முன்னுரிமைப்படுத்தல்களும் வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 1.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.4**: 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் அரசாங்க சுகாதார கொள்கைக் கட்டமைப்பை ஒப்பிடுதல்

| # | அரச கொள்கை களின் முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் குறித்தான சுருக்கம் |
|---|---|---|
| 1 | சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துதல் | **சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துவதால் கீழுள்ள முக்கியமான கொள்கைத் திட்டங்களில் பெரும்பாலானவைகளுக்கு போதியளவு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் சில சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை.**<br><br>2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட முன் மொழிவில் வைத்தியசாலை அபிவிருத்தித் திட்டங்களுக்காக 30,312 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேச வரவு செலவுத் திட்ட த்துடன் ஒப்பிடுகையில் 91 மில்லியன் ரூபா அதிகமானதாகும். அத்துடன் 2019 ஆம் ஆண்டின் உண்மையான செலவினத்துடன் ஒப்பிடுகையில் 16,635 மில்லியன் ரூபா அதிகமானதாகும். |
| 1.1 | கொழும்பு தேசிய வைத்தியசாலை உயர் சர்வதேச மட்டத்தினாலான வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்படும். அத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தரத்திற்கு உயர்த்தப்படும். | கொழும்பு வைத்தியசாலையை சர்வதேச மட்டத்திற்கு தரம் உயர்த்துவதற்கு 510 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் **இத் திட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் மொத்தத் தொகை 14,600 மில்லியன்** ரூபாவாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளையும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மட்டத்திற்கு தரம் உயர்த்துவதற்கு 250 மில்லியன் ரூபா நிதி ஒது க்கப்பட்டுள்ள போதிலும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதித் தொகையும் **பதுளை மாவட்டத்திலுள்ள ஒரு வைத்தியசாலைக்கு செலவிடப்படவுள்ளது.** |
| 1.2 | அனைத்து வைத்தியசாலைகளுக்கும் இரசாயன கூடங்கள் மற்றும் மனித வளங்கள் உள்ளிட்ட தேவையான வசதிகள் அளிக்கப்பட்டு மேம்படுத்தப்படும். இவ் வைத்தியசாலைகளுக்கு அனைத்து வெளிநோயாளர்களுக்கான சிசிக்சைகளை வழங்குவதற்கு பொறுப்பளிக்கப்படுவதுடன் இவ் வைத்தியசாலையில் இருந்து நோயாளர்களை உரிய வைத்தியசாலைகளுக்கு அனுப்பிவைக்கும் முறைமையொன்றும் அறிமுகப்படுத்தப்படும். | இந்த நடவடிக்கைக்காக 2021 ஆம் ஆண்டில் அரசாங்கம் 7,945 மில்லிய ன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உத்தேச வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை களுடன் ஒப்பிடுகையில் சில உப பிரிவுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகமானதாகும். ஆனால் 2019 ஆம் ஆண்டின் நடைமுறை ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடுகையில் இது குறைவானதாகும். |
| 1.3 | E-Health மற்றும் வுநடநஅநனைஉைநெ போன்ற முன்னேற்றகரமான முறைகளின் மூலம் நோயை இனங்காண்பதற்கும் சிகிச்சை பெறுவதற்குமான முறையொன்று அறிமுகப்படுத்தப்படும். | **நிதி ஒதுக்கீடுகளானது ஒரு போதும் கொள்கையின் நோக்கத்தை அடைவதில்லை.** உதாரணமாக ICTA இன் ஊடாக இலங்கை அரச வைத்தியசாலைகளில் இலத்திரனியல் மருத்துவ பதிவுகளை நடைமுறைப்படுத்த 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஏனைய நவீன நோயறிதல்/ சிகிச்சை வசதிகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. |
| 1.4 | மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்த போதுமான வசதிகளைக் கொண்ட உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) தரச்சான்றிதழுக்கு அமைய இரசாயனக் கூடங்களை உருவாக்குதல். | உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) தரச்சான்றிதழுக்கு அமைய போதுமான வசதிகளைக் கொண்ட இரசாயனக் கூடங்களை உருவாக்குவதற்கு **எவ்விதமான** நிதி **ஒதுக்கீடுகளும்** மேற்கொள்ளப்படவில்லை. |

| # | அரச கொள்கை களின் முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் குறித்தான சுருக்கம் |
|---|---|---|
| 2 | நாட்டில் வைத்தியர்களை தக்க வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல். | **2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைவானதாகும், இருப்பினும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமானதாகும்.** மருத்துவத் துறையில் வைத்தியர்கள் மற்றும் நிபுணர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1,579 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் 1,182 பில்லியன் ரூபாவும் 2019 ஆம் ஆண்டில் 1,831 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தன. |
| 3 | அத்தியாவசிய மருந்துகளினதும் பொருட்களினதும் பாதுகாப்பு கருதி கட்டாயமாக வைத்திருக்க வேண்டிய பங்குகளைப் பராமரித்தல் | **2020 ஆம் ஆண்டில் 65,914 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மருந்துகளை விநியோகிக்கும் பிரிவுக்கான செலவினம் 2021 ஆம் ஆண்டில் 61,118 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.** எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டுக்கான நடைமுறைச் செலவினமான 54,595 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு அதிகமானதாகும். |
| 4 | கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளின் போஷாக்குத் தேவைகளை நிவர்த்தி செய்ய 'புதிய போஷாக்கு உதவித்திட்டத்தை' நடைமுறைப்படுத்துதல். | 2019 ஆம் ஆண்டில், 275 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட செலவின ஒதுக்கீடுகளானது **85 சதவீதத்தினால் அதிகரித்து 2021 ஆம் ஆண்டில்** 4,200 மில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. வரவு செலவுத் திட்ட உரையில் ஒதுக்கப்பட்ட 1.5 பில்லியன் ரூபாவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு வெறுமனே 1,638 மில்லியன் ரூபா மாத்திரமே. |
| 5 | பின்ரும் விடயங்கள் உள்ளடங்களாக சுதேச மருத்துவத் துறைக்கான வருடாந்த ஒதுக்கீட்டுத் தொகையினை அதிகரித்தல்:<br>- ஆயுர்வேத வைத்தியசாலைகளின் தரத்தை உயர்த்துவ-தற்கு தேவையான வசதிகள் வழங்கப்படும்<br>- நோய் பரவுவதை தடுக்கும் வசதிகளை வழங்குதல்<br>- ஆயுர்வேத வைத்தியர்களுக்கான வசதிகளை வழங்குதல்<br>- சுதேச மருந்துகள் மற்றும் சிகிச்சை முறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதனை ஊக்குவித்தல், மருத்துவ குணத்துடன் கூடிய சகல விதமான தாவரங்க ளைப் பயிரிடுவதற்கும் மூலிகைத் தோட்டங்களை அமைப்பதற்கும் தேவையான வசதிகளையும், மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்படும் அழகு சாதனப் பொருட் களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளையும், வழங்குதல். | சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சுக்கு **2021** ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்த செலவினம் **2,649 மில்லியன்** ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசத் தொகைகளுடன் ஒப்பிடுகையில் இத் தொகையானது 36% அதிகரிப்பினையும் 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினத்துடன் ஒப்பிடுகையில் 54% அதிகரிப்பினையும் கொண்டுள்ளது<br><br>கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது சுதேச மருத்துவம் சார்ந்த குறிப்பிட்ட கொள்கைகளுக்கான ஒதுக்கீடுகளும் அதிகரித்துள்ளன |

# 2. பாதுகாப்புத் துறை

பாதுகாப்புத் துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்தச் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள குறிப்பிட்ட பிரிவுகளின் செலவினங்கள் உள்ளடங்கும். இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை வான்படை, சிவில் பாதுகாப்புத் திணைக்கள், இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம், பாதுகாப்பு அமைச்சின் ஏனைய ஒதுக்கீடுகள் ஆகியவை இதில் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள பிரிவுகளுக்குள் அடங்கும். இலங்கைத் தொல்பொருளியல் திணைக்களம், பல்நோக்கு அபிவிருத்திப் பணிக்குழு, நிர்வாகம் மற்றும் ஸ்தாபன சேவைகள் (சட்டம் மற்றும் ஒழுங்கு), சிறப்பு அதிரடிப்படை மற்றும் தேசிய ஊடக நிலையம் ஆகிய பாதுகாப்பு பணிகளுடன் தொடர்பற்ற செலவின பிரிவுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. இவற்றைத் தவிர வரவு செலவுத் திட்டத்தின் உத்தேச பெறுமதிகளும் பாதுகாப்புத் துறைக்கான வரவு செலவுத் திட்ட உரையின் போது குறிப்பிடப்பட்ட ஒதுக்கீடுகளும் 2021 ஆம் ஆண்டிற்கான உத்தேசத் தொகைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### *2021 ஆம் ஆண்டில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடுகள் 46 பில்லிய ன் ரூபாவினால் அதிகரித்துள்ளன*

**அட்டவணை 2.1:** பாதுகாப்புத் துறைக்கான செலவினச் சுருக்கம் (*பெறுமதிகள் ஷரூ. பில்லியனில்*)

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்க-ளம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| **பாதுகாப்புத் துறை** | **295.6** | **303.0** | **348.4** | **15.0%** |
| அரச செலவினத்தின் பங்கு | *9.99%* | *8.53%* | *9.20%* | |
| மொ.உ.உ இன் பங்கு | *1.97%* | *1.89%* | *1.98%* | |
| பாதுகாப்பு அமைச்சு* | 295.6 (9.99%) | 303.0 (8.53%) | 327.7 (8.65%) | **8.2%** |
| இலங்கை இராணுவம் | 155.3 (5.25%) | 164.6 (4.64%) | 169.8 (4.48%) | **3.2%** |
| இலங்கை கடற்படை | 56.4 (1.91%) | 56.4 (1.59%) | 61.6 (1.62%) | **9.2%** |
| இலங்கை விமானப்படை | 39.6 (1.34%) | 44.2 (1.25%) | 51.6 (1.36%) | **16.7%** |

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| இலங்கை சிவில் பாதுகாப்பு | 16.8 (0.57%) | 19.2 (0.54%) | 19.3 (0.51%) | **8.6%** |
| இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 0.3 (0.01%) | 0.2 (0.01%) | 0.3 (0.01%) | **27.5%** |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 20.8 (0.55%) | வி.கி. |


குறிப்பு: 2019 உண்மையான செலவினங்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் 2020 திருத்தப்பட்ட மதிப்பீடுகள் ஏற்கனவே அரசாங்க முகவரக செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தேசியப் பாதுகாப்பு (ரூ.20,000 மில்லியன்) மற்றும் யுத்த வீரர்களுக்கான திட்டங்கள் (ரூ.750 மில்லியன்) ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கியது.

வி.கி. - விபரம் கிடைக்கவில்லை

மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).

### *பாதுகாப்புச் செலவினங்களில் 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 4.6% வளர்ச்சியைத் தவிர பெரும்பாலும் மாற்றமடையாமல் உள்ளன*

**அட்டவணை 2.2**: பாதுகாப்புத் துறையின் செலவினங்கள், ரூ. பில்லியன் ரூபாவில், 2015 – 2019



### கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் தவிர ஏனையவற்றின் நடைமுறைச் செலவினங்கள் ஒதுக்கீடுகளுக்கு இணங்க காணப்படுகின்றன

**அட்டவணை 2.3**: கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம்/அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவினத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| **பாதுகாப்புத் துறை** | **0.04%** | **6.02%** |
| இலங்கை இராணுவம் | -0.39% | 4.86% |
| இலங்கை கடற்படை | -0.13% | 4.16% |
| இலங்கை விமானப்படை | -4.17% | 8.49% |
| இலங்கை சிவில் பாதுகாப்பு | -0.69% | 4.26% |
| இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 106.90% | 17.96% |

#### பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்துக்கான பாதுகாப்புத் துறை ஒதுக்கீடு 348 பில்லியன் ரூபாவாகும். இது அரசாங்க செலவினத்தின் 9.55% சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.98% சதவீதத்திற்கும் சமமானதாகும்.

2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடு 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு கடந்த ஐந்து ஆண்டுகளில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீட்டில் ஏற்பட்ட மிகப்பெரிய அதிகரிப்பாகும். 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடுகளின் வருடாந்த சராசரி வளர்ச்சி 0.04% ஆகும். 2016 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட 8.8 சதவீதக் குறைப்பே இதற்கான காரணமாகும்.

### அரச கொள்கையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் அரசாங்கம் குறிப்பிட்ட அனைத்துக் கொள்கைகளுக்கும் போதுமான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துறைக்கான குறிப்பிட்ட கொள்கை முன்னுரிமைப் படுத்தல்களும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 2.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4**: 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் அரசாங்கத்தின் பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்பை ஒப்பிடுதல்

| # | அரச கொள்கை முன்னுரிமைப் படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1 | புலனாய்வு அமைப்புகளைப் பலப்படுத்துதல். | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் அனைத்தும் இக் கொள்கைக்கு இணங்க காணப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் ரூ.1,779 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரச புலனாய்வுச் சேவையின் மொத்தச் செலவினம் 12 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் 1,994 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. |
| 1.1 | உள்நாட்டு, வெளிநாட்டு நவீன பயிற்சிகளை வழங்குதல். | 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.7 மில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 0.74 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட பணியாளர்களின் பயிற்சிக்கான செலவின ஒதுக்கீடுகளானது 2021ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. |
| 1.2 | நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பணியாளர்களுக்கு வாய்ப்பளித்தல் | 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 8 மில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 36 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட **"குறிப்பாக உபகரணங்கள் சார்ந்த மூலதன சொத்துக்களுக்கான செலவின ஒதுக்கீடுகளானது"** 2021ஆம் ஆண்டில் 55 மில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. |
| 2 | சம்பளம்,கொடுப்பனவுகள் தொழில் முன்னேற்றத்துக்கான ஆக்கமுயற்சி சார்ந்த பிரச்சினைகள் மற்றும் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து பணியில் ஈடுபட்டு வரும் ஆயுதப்படை வீரர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குவதில் ஏற்பட்ட இழப்பீடு வழங்குதல் போன்றவற்றில் காணப்படும் ஒழுங்கீனங்களை சீர்ப்படுத்துதல் | வரவு செலவுத் திட்டத்தின் உத்தேச பெறுமதிகளில் இருந்து சம்பள முரண்பாடுகள் சீர்படுத்தப்பட்டுள்ளதா என்னும் விடயம் தெளிவாக இல்லை. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 265 பில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 282 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட "தனிநபர் ஊதிய செலவினங்களுக்கான செலவின ஒதுக்கீடுகளானது" 2021ஆம் ஆண்டில் 290 பில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. |
| 3 | ஊனமுற்ற ஆயுதப் படை வீரர்களது மற்றும் நோய்வாய்ப்பட்ட ஆயுதப்படைவீரர்களதும் வாழ்க்கைத் துணைவர்கள் / துணைவியர்கள் அல்லது பிள்ளைகளுக்கு குடியிருப்புக்கள் இருப்பிட வசதிகள் சலுகை வீட்டுக் கடன்கள் என்பவற்றை வழங்குதல். | 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 7345 மில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 7812 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட "கட்டிடம் மற்றும் கட்டமைப்புகளை சுவீகரித்துக் கொள்வதற்கான மொத்தச் செலவின ஒதுக்கீடு" 2021 ஆம் ஆண்டில் 13582 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு 74 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது |

# 3. உட்கட்டமைப்புத் துறை

உட்கட்டமைப்புத் துறை மூன்று உப பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது: (1) போக்குவரத்து, (2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, (3) மின்சாரம், சக்தி மற்றும் நீர்வழங்கல்.

## போக்குவரத்துத் துறை

போக்குவரத்துத் துறைக்கான ஒதுக்கீடுகள் போக்குவரத்து அமைச்சு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் கீழ்வரும் இராஜாங்க அமைச்சுக்கள் ஆகியவற்றின் செலவுகளை உள்ளடக்கியது.

### *போக்குவரத்துக்கான ஒதுக்கீடுகள் குறையும் போதும் வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கின்றன*

**அட்டவணை 3.1.1**: போக்குவரத்து துறை செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் ஷரூ. பில்லியனில்**

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | Y-o-Y மாற்றம் 2020 திருத்தப்பட்டது - 2021 பாதீடு |
|---|---|---|---|---|
| **போக்குவரத்துத் துறை** | **218.7** | **341.0** | **437.2** | **28.2%** |
| அரச செலவினத்தின் பங்கு | *7.39%* | *9.60%* | *11.54%* | |
| மொ.உ.உ இன் பங்கு | *1.46%* | *2.13%* | *2.49%* | |
| போக்குவரத்து அமைச்சு | 56.8 (1.9%) | 64.5 (1.8%) | 41.4 (1.1%) | **-35.8%** |
| இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களம் | 35.9 (1.2%) | 49.4 (1.4%) | 34.5 (0.9%) | **-30.3%** |

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019<br>உண்மை | 2020<br>திருத்தப்பட்டது | 2021<br>பாதீடு | 2020 திருத்-தப்பட்டது - 2021 பாதீடு |
| வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்து போக்குவரத்து சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு | 3.3<br>(0.1%) | 21.8<br>(0.6%) | 17.7<br>(0.5%) | **-18.8%** |
| போக்குவரத்துத் திணைக்களம் | 3.3<br>(0.1%) | 2.7<br>(0.1%) | 3.3<br>(0.1%) | **23.4%** |
| நெடுஞ்சாலைகள் அமைச்சு | 156.7<br>(5.3%) | 245.0<br>(6.9%) | 330.2<br>(8.7%) | **34.8%** |
| கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | வி.கி. | 6.2<br>(0.2%) | 25.1<br>(0.7%) | **304.3%** |
| துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சு | 1.9<br>(0.1%) | 1.0<br>(0.0%) | 1.6<br>(0.0%) | **62.7%** |
| களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | 0.0<br>(0.0%) | 2.5<br>(0.1%) | 1.3<br>(0.0%) | **-50.8%** |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 20.0<br>(0.5%) | வி.கி. |


*குறிப்பு: 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் மற்றும் 2020 திருத்-தப்பட்ட உத்தேசப் பெறுமதிகள் ஏற்கனவே அரச நிறுவனங்களின் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 100,000 கிலோமீற்றர் வீதித் திட்டத்துக்கான (ரூ.20 பில்லியன்) ஒதுக்கீடுகளை உள்ளடக்கியுள்ளது. விமான சேவைகள் தொடர்பில் விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் எந்த ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படாததால் அந்த அமைச்சு உள்ளடக்கப்படவில்லை.*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

## கடந்த காலங்களில் போக்குவரத்து செலவினங்கள் பெரும்பாலும் மாறாமல் காணப்பட்டன

**அட்டவணை 3.1.2**: போக்குவரத்துத் துறை செலவினம், ரூ.பில்லியனில், 2015 – 2021




### பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்துக்கான போக்குவரத்துத் துறை ஒதுக்கீடு 437 பில்லியன் ரூபாவாகும். இது அரசாங்க செலவினத்தின் 12மூ சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 சதவீதத்திற்கும் சமமாகும்.

2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் பாரிய அதிகரிப்பு போக்குவரத்துத் துறைக்கே வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டில் இத் துறைக்கான மொத்த ஒதுக்கீடு 96 பில்லியன் ரூபாவினால் (அல்லது 28மூ) அதிகரிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினத்துடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டுக்கான செலவின ஒதுக்கீடானது 218 மில்லியன் ரூபாவினால் அதிகரித்து இரட்டிப்பாகியுள்ளது. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பங்காக போக்குவரத்துத்துறை ஒதுக்கீடானது 2019 ஆம் ஆண்டில் 7.4 சதவீதமாகக் காணப்பட்டதோடு, 2021 ஆம் ஆண்டில் 12 சதவீதமாக அதிகரித்துள்ளது.

நெடுஞ்சாலை அமைச்சுக்கான ஒதுக்கீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பே இந்த அதிகரிப்புக்கான முக்கிய காரணமாகும். 2019 ஆம் ஆண்டில் 157 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் 157 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 330 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கும் 19 பில்லியன் ரூபா அதிகரித்த ஒதுக்கீடு காணப்படுகின்றது. அத்துடன் 100,000 கிலோமீட்டர் கிராமிய வீதிகளை நிர்மானிப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் 20 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க வீதி அபிவிருத்தியின் கீழ் வரும் அரசாங்கத்தின் நிதி தேவைப்படும் அனைத்துக் கொள்கைகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் புகையிரதங்கள், பேருந்துக்கள், துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்களுடன் தொடர்புடைய சில கொள்கைகளுக்கு நிதி வழங்கப்படவில்லை. போக்குவரத்துத் துறைக்கான குறிப்பிட்ட கொள்கை முன்னுரிமைகளும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 3.1.3 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1.3**: 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க பாதுகாப்புக் கொள்கைக் கட்டமைப்பு

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1 | அனைத்தையும் இணைக்கின்ற வலையமைப்புடன் கூடிய வீதிக் கட்டமைப்பு | 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 156.7 பில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 245 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கான மொத்தச் செலவின ஒதுக்கீடுகள் 2021 ஆம் ஆண்டில் 330 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது..<br><br>எவ்வித ஒதுக்கீடுமின்றி பூச்சியமாகக் காணப்பட்ட **கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சுக்கான ஒதுக்கீடுகளும்** 2019 ஆம் ஆண்டில் 25 பில்லியன் ரூபாவாக **உயர்த்தப்பட்டுள்ளது.** |
| 1.1 | கொழும்பு – கண்டி அதிவேக நெடுஞ்சாலை, கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை துறைமுக நகரம் வரை விரிவாக்குதல், வடக்கு மற்றும் இரத்தினபுரி அதிவேக நெடுஞ்சாலை நீட்டிக்கப்படுவதுடன் கண்டி மற்றும் நுவரெலியாவை இணைக்கும் அதிவேகப் பாதைகளை நிர்மானிப்பது குறித்தான சாத்தியப்பாட்டுக் கற்கைகள் மேற்கொள்ளப்படும | **2020** ஆம் ஆண்டில் **134** பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட **அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான** மொத்த ஒதுக்கீடுகளானது **2021** ஆம் ஆண்டில் **63** பில்லியன் ரூபாவாகக் **குறைக்கப்பட்டுள்ளது.** தெற்கு அதிவேக நெடுஞ்சாலை மற்றும் வெளிப்புற சுற்றுவட்ட நெடுஞ்சாலைக்கு எவ்வித ஒதுக்கீடும் செய்யப்படாமையே இதற்கான காரணமாகும். இவ்விரண்டு திட்டங்களுக்கும் 2020 ஆம் ஆண்டில் 92 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.<br><br>2021 ஆம் ஆண்டில் ஏனைய நெடுஞ்சாலைப் பணிகளுக்கும் பின்வருமாறு செலவின ஒதுக்கீடு கள் செய்யப்பட்டிருந்தன:<br>**1.** கொழும்பிலிருந்து கண்டி வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை: 35 பில்லியன் ரூபா<br>**2.** கொழும்பு – இரத்தினபுரி – பெல்மதுளை அதிவேக நெடுஞ்சாலை: 40 மில்லியன் ரூபா<br>**3.** புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரைய-ிலான உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலை: 14 பில்லியன் ரூபா<br>**4.** துறைமுகத்தை அடைவதற்கான நெடுஞ்சாலைத் திட்டம்: 20 பில்லியன் ரூபா |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1.2 | முந்திச் செல்லும் பாதைகளை இணைத்தல், 120,000 கிலோமீற்றர் சாலைகளை நவீனமயமாக்குதல் மற்றும் 100,000 கிலோமீற்றர் மாற்றுச் சாலை அமைப்பை உருவாக்குதல் | 2020 ஆம் ஆண்டில் 81 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்திக்கான மொத்த ஒதுக்கீடுகளானது 2021 ஆம் ஆண்டில் 218 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பாரிய அளவிளான ஒதுக்கீடுகளைக் கொண்ட நெடுஞ்சாலைத் திட்டங்களாவன:<br>**1.** 2020 ஆம் ஆண்டில் 5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட முக்கிய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகளை அணுகுவதற்கான **100,000** கிலோமீற்றர் **உள்வீதிகளின்** அபிவிருத்திக்கான மொத்த ஒதுக்கீடுகளானது 2021 ஆம் ஆண்டில் 93 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன (அது மட்டுமன்றி அரசாங்கம் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் மேலதிகமாக 20 பில்லியன் ரூபாவை ஒதுக்கியது)<br>**2.** வீதித் திட்டம் (GOSL-ADB) – இற்கு 2020 ஆம் ஆண்டில் 27 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட ஒதுக்கீடுகளானது 2021 ஆம் ஆண்டில் 42 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன.<br>**3.** 2020 ஆம் ஆண்டில் 13 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கடமைகளுக்கான நிதி ஒதுக்கீடானது இருந்து 2021 ஆம் ஆண்டில் 31 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது<br>2020 ஆம் ஆண்டில் 13.5 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட பாலங்கள் மற்றும் மேம்பாலங்களின் நிர்மானப் பணிகளுக்கான ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் 27 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், கிராமிய வீதி மற்றும் பாலம் அபிவிருத்திக்காக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் இராஜாங்க அமைச்சுக்கும் 25 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 2 | புகையிரத மற்றும் பேருந்துப் போக்குவரத்து சேவைகள் | 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 56.8 பில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 64.5 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட **போக்குவரத்து அமைச்சுக்கான மொத்தச் செலவின ஒதுக்கீடுகள்** 2021 ஆம் ஆண்டில் 41.4 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது. |
| 2.1 | கொழும்பு – பாணந்துறை- வெயாங்கொட – ராகம – கட்டுநாயக்க – நீர்கொழும்பு மற்றும் மருதானை – ஹோமாகம ரயில் தடங்கள் மின்சார ரயில் பாதைகளாக மாற்றப்படும் அனைத்து முக்கிய புகையிரத நிலையங்களும் மேம்படுத்தப்படுவதுடன் இலத்திரனியல் பயணச்சீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படும். | கொள்கையில் குறிப்பிடப்பட்ட புகையிரதப் பாதை அபிவிருத்திக்காக கொழும்பு புறநகர் புகையிரத மேம்பாட்டுத் திட்டம் (GOSL/ADB) மற்றும் ஸ்மார்ட் பயணச்சீட்டு முறைமைக்கும் 3.4 பில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளதோடு போக்குவரத்து திட்ட ஆரம்பப் பணிகளுக்காக 1.9 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2.2 | அனைத்து புகையிரத பெட்டிகள் மற்றும் ரயில் பாதைகள் மேம்படுத்தப்படும். தேவைப்படும் என்ஜின்களை இறக்குமதி செய்ய உதவி வழங்கப்படும். சரக்குப் போக்குவரத்துக்குத் தேவைப்படும் பார ஊர்திகளை உள்ளூரில் தயாரிப்பதற்கான முறை மைகள் தோற்றுவிக்கப்படும் | 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 25,633 மில்லியன் ரூபாவாகவும், 2020 ஆம் ஆண்டில் 39,495 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட **புகையிரதங்கள், பாதைகள் மற்றும் சமிக்ஞை முறைகளின் அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள்** 2021 ஆம் ஆண்டில் 24,290 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது<br><br>200 பயணிகள் ரயில் பெட்டிகளுக்கான திருத்தங்கள் உள்ளிட்ட **வாகனங்களை மீளமைப்பது மற்றும் மேம்படுத்துவதற்காக 4,060 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.**<br><br>**2021 ஆம் ஆண்டில் இன்ஜின்களை கொள்வனவு செய்வதற்கு எந்த தொகையும் ஒதுக்கப்படவில்லை.** எனினும் 2022 ஆம் ஆண்டு முதல் 12 என்ஜின்களை (GOSL/Canada) கொள்வனவு செய்வதற்கு வருடாந்தம் 3 பில்லியன் ரூபா செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 2.3 | தற்போதுள்ள பேருந்துகளை உரிய வகையில் பராமரித்து இலங்கை போக்குவரத்துச் சபையை நவீனமயப்படுத்தல், 'பசுமைப் போக்குவரத்து' எண்ணக்கருவைப் பின்பற்றுதல், புகையிரத மற்றும் பேருந்து தடங்களை இணைத்தல், ஏற்கனவேயுள்ள கால்வாய்கள் மற்றும் நிறுத்தி வைத்து விட்டு சவாரி செய்யும் முறை (Park and ride) ஆகியவற்றை அபிவிருத்தி செய்தல், எந்தவொரு பேருந்திலும் பயன்படுத்தக்கூடிய மின் டிக்கட்டுக்களை அறிமுகப்படுத்தல். | 2020 ஆம் ஆண்டில் 19 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட "வாகன ஒழுங்குபடுத்தல், பேருந்து போக்குவரத்து சேவைகள், ரயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கான ஒதுக்கீடுகள்" 2021 ஆம் ஆண்டில் 14 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது<br><br>2020 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 200 பேருந்துகளை வாங்குவதற்கு 6 பில்லியன் ரூபாஒதுக்கப்பட்டது. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இந்தியக் கடன் உதவியுடன் 500 பேருந்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு முறையே 895 மில்லியன் ரூபாவும் 2,910 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 3 | துறைமுகம் மற்றும் விமான சேவைகள் | 2020 ஆம் ஆண்டில் 1.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட **"துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுக்கான ஒதுக்கீடுகள்"** 2021 ஆம் ஆண்டில் 1.6 பில்லியன் ரூபாவாகக் அதிகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் செலவின ஒதுக்கீடான 1.9 பில்லியன ரூபாவுடன் ஒப்பிடுகையில் இது குறைவானதாகும்<br><br>மேலும் களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், படகுகள் மற்றும் கப்பற்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான ஒதுக்கீடு 2020 ஆம் ஆண்டில் 2.5 பில்லியன் ரூபாவில் 1.3 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது. |
| 3.1 | கொழும்பு துறைமுகம்: கிழக்கு முனையம் மற்றும் மேற்கு கொள்கலன் முனையத்தை நிர்மாணித்தல். | வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மற்றும் மேற்கு கொள்கலன் முனையத்திற்கு **எவ்விதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 3.2 | கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் ஜயபுர இடையே புதிய முனையத்தை நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் முன்னெடுக்கப்படும். | கொழும்பு வடக்கு துறைமுகத்தின் சாத்தியக் கூறு ஆய்வுகளுக்காக **380 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.** |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 3.3 | அம்பாந்தோட்டை துறைமுகம்: கப்பல் பராமரிப்பு, பழுது பார்த்தல், கப்பல்களுக்குத் தேவையான எரிபொருள், உணவு உள்ளிட்ட சேவைகளை வழங்குவதுடன் அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்திற்கு தேவையான சகல பௌதீக வளங்களும் உருவாக்கப்படும். | எவ்விதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. |
| 3.4 | காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படும். | காங்கேசன்துறை துறைமுகத்தை புணரமைப்பதற்கு மாத்திரம் 1.1 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 3.5 | கொழும்பு விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுபாதை மற்றும் இரண்டாவது பயணிகள் பாவனைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படும், மத்தள விமான நிலையத்தின் வசதிகளை மேம்படுத்துவதுடன், புதிய ஓடுபாதை மற்றும் பொருள் கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்படும், சகல உள்ளூர் விமான நிலையங்கள் மற்றும் பயணிகள் முனையங்கள் அபிவிருத்தி செய்யப்படும். | எந்த விமானநிலைய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான நிதி ஒதுக்கீடும் செய்யப்படவில்லை. |

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு உபதுறைக்கான ஒதுக்கீடானது, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினதும் அவ்வமைச்சின் கீழுள்ள இராஜாங்க அமைச்சுக்கனதும் செலவினங்களை உள்ளடக்கியது.

### *2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் அதிகரித்துள்ள போதிலும் 2019 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுத் தொகையிலும் பார்க்க அதிகமானதாக இல்லை*

**அட்டவணை 3.2.1:** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்**

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை | **62.1** | **51.9** | **59.5** | **14.7%** |
| *அரச செலவினத்தின் பங்கு* | *2.1%* | *1.5%* | *1.6%* | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *0.41%* | *0.32%* | *0.34%* | |
| நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு* | 58.3 (2.0%) | 20.5 (0.58%) | 23.5 (0.62%) | **14.7%** |
| தேசிய பௌதீக திட்டமிடற் திணைக்களம் | 0.19 (0.006%) | 0.18 (0.005%) | 0.40 (0.011%) | **127%** |

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு** | வி.கி. | 23.2 (0.65%) | 12.6 (0.33%) | **-45.6%** |
| கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | 0.7 (0.02%) | 6.4 (0.18%) | 18.6 (0.49%) | **189.0%** |
| தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாயக் கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு** | 3.0 (0.10%) | 1.8 (0.05%) | 2.8 (0.07%) | **55.5%** |
| கட்டிடத் திணைக்களம் | 0.46 (0.016%) | 0.45 (0.013%) | 0.59 (0.016%) | **31.6%** |
| அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம் | 0.28 (0.009%) | 0.27 (0.008%) | 0.24 (0.006%) | **-11.6%** |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 2.0 (0.053%) | வி.கி. |

குறிப்பு: *2019 இல் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் தற்போது கைவிடப்பட்டுள்ள மெகாபொலிசி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் உள்ளடக்கப்படவில்லை


***தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாயக் கட்டமைப்பு இராஜாங்க அமைச்சும் தற்போது கைவிடப்பட்ட சமூக மேம்பாடு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினை 2019 இல் உள்ளடக்கியிருந்தது.

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

*மூலம்: உத்தேச வரவு செலவுத் திட்ட வரைவு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

***கடந்த காலங்களில் இத் துறைக்கான செலவினத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டில் மிதமாகியுள்ளது.***

**வரைபடம் 3.2.2**: நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறை செலவினம், பில்லியன் ரூபாவில், 2015 – 2021




## பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறைக்கான மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடு 59.5 பில்லியன் ரூபாவாகும். இது அரசாங்க செலவினத்தின் 1.6% சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.34% சதவீதத்திற்கும் சமமாகும்.

இத் துறைக்கான 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான ஒதுக்கீடுகள் குறைந்துள்ளன. மெகாபொலிசி மற்றும் மேல் மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கான அமைச்சின் பணிகள் நிறுத்தப்பட்டமையே இதற்கான முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும், இவ்வமைச்சின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சில திட்டங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பின் கீழ் குறிப்பிடப்பட்ட கொள்கைகள் சிலவற்றுக்கு மாத்திரமே செலவின ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் துறைக'கான குறிப்பிட்ட கொள்கை முன்னுரிமைப்படுத்தல்களும', வரவு செலவுத' திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் பின்வரும் அட்டவணை 3.2.3 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2.3**: 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புக் கொள்கைக் கட்டமைப்பு

| # | அரச கொள்கை முன்னுரிமைப் படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **1** | **நகர அபிவிருத்தி** | |
| 1.1 | கொழும்பு துறைமுகத்தையும் கட்டுநாயக்க விமான நிலையத்தையும் அம்பாந்தோட்டை துறைமுகத்தையும் மத்தள விமான நிலையத்தையும் காங்கேசன்துறை துறைமுகத்தையும் விமான நிலையத்தையும் ஒருங்கிணைக்கும் வகையில் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த 'சீ' வடிவிலான ஒன்பது பொருளாதார வலையமைப்புக்கள் (Economic corridors) உருவாக்கப்படவுள்ளன. | ஒன்பது மாகாணங்களில் நகர அபிவிருத்தித் திட்டங்களுக்காக **3,423 மில்லியன் ரூபா ஒதுக்கீடு** செய்யப்பட்டுள்ள போதிலும் இது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வலையமைப்புக்க ளுடன் தொடர்புடையதா என்பதனைத் தீர்மானிக்க முடியவில்லை. |
| 1.2 | பல பரிமாண நான்கு நகரங்களையும் (கொழும்பு, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், திருகோணமலை) தேசிய, இணைப்பு மற்றும் கொத்தணி நகரங்களையும் உருவாக்குதல். | **பல பரிமாண வர்த்தக நகரங்கள் அல்லது** பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த வலையமைப்புக்களை ஒருங்கிணைப்பதற்காக வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகமாக புதிய திட்டங்கள் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தை மூலோபாய நகர மாக அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக 1 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 1.3 | லைட் ரயில் ட்ரான்சிஸ்ட் முறை, ஒரு வழிப்பாதை மற்றும் சுற்றுவட்டப்பாதை முறை, சிறிய மேம்பாலங்களை அமைத்தல், செங்குத்தான வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் முக்கிய பகுதிகளில் மேம்பாலங்களை அமைப்பதன் மூலம் கொழும்பைப் புதிய வர்த்தக மையமாகவும் நிதி மையமாகவும் உருவாக்குதல். | லைட் ரயில் ட்ரான்சிஸ்ட் திட்டத்திற்காக எவ்விதமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை. |
| 1.4 | சிறப்பான கழிவு முகாமைத்துவம் மற்றும் நீர் சுத்திகரிப்பு முறை உள்ளிட்ட புதிய கொழும்பு நகரை அழகுபடுத்தும் திட்டம் | மெட்ரோ கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்திற்காக (2021 ஆம் ஆண்டில் 5.7 பில்லியன் ரூபா) ஒதுக்கப்பட்டுள்ளது. |
| **2** | **வீடமைப்பு** | |
| 2.1 | நீண்டகால இலகு முறைத் தவணைக் கட்டணத் திட்டங்கள் ஊடாக இளம் தம்பதிகள் நகர்ப்புறத்தில் ஒரு வீட்டை வாங்குவதற்கு பொது-தனியார் கூட்டு ஏற்பாடுகளின் கீழ் சிறப்பு வீட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். | எவ்விதமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை |
| 2.2 | தற்காலிக தங்குமிடம் தேவைப்படுபவர்களுக்கு நியாயமான வாடகைக்கு தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வைகயில் அரச மற்றும் தனியார் துறையினரின் கூட்டுறவின் கீழ் மாடி வீட்டுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தல். | அரச மற்றும் தனியார் துறையின் பங்களிப்புடன் மாடி வீட்டுத் திட்டங்களை நிறுவுவதற்கு நிர்மாணத்திற்கு **எவ்விதமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.** |
| 2.3 | நாடு முழுவதிலும் உள்ள புனரமைக்க முடியாத பழையமாடி வீடுகளுக்குப் பதிலாக புதிய மாடி வீடுகளை நிர்மானித்தல் | வீடமைப்புத் திட்டங்களை புனரமைப்பதற்காக 100 மில்லியன் ரூபா **ஒதக்கப்பட்டுள்ளது.** |
| 2.4 | இடம்பெயர்ந்தவர்களுக்கும் குடிசைகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுத் திட்டங்களிலிருந்து வீடுகளை வழங்குதல். | குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டைப் போன்றே **8 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.** |

| # | அரச கொள்கை முன்னுரிமைப் படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2.5 | கிராமப் புறங்களில்சகல வசதிகளையும் கொண்ட வீடமைப்புத்திட்டம் ஏற்படுத்தப்படுவதுடன் அதனூடாக விவசாயத்திற்குத் தேவையான காணிகள் பாதுகாக்கப்படும். | கிராமப்புற விவசாயப் பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு எவ்விதமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை |
| 2.6 | போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதல். பயிர் நிலங்களைப் பாதுகாக்கும் வகையில் கொங்கிரீட் கூரைகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். | 2019 ஆம் ஆண்டில் 1.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பாரம்பரிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வகையில் வீடமைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் 5 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| 2.7 | இந்த வீடமைப்புத் திட்டத்தில் சகல வசதிகளும் கொண்ட சுகாதார நிலையங்கள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளுடன் அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் வீடுகள் வழங்கப்படும். | 2021 ஆம் ஆண்டில்தோட்டப்புற வீடமைப்புத் திட்டங்களுக்கு 1 பில்லியன் ரூபாவும் இந்திய மானிய உதவிகளுடன் நிர்மாணிக்கப்படும் வீட்டு திட்டங்களுக்கு 0.5 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

## மின்சக்தி, வலு மற்றும் நீர்வழங்கல் துறை

மின்சக்தி, வலு மற்றும் நீர்வழங்கல் துறைக்கான ஒதுக்கீடுகளில் வலுசக்தி அமைச்சு, மின்சக்தி அமைச்சு, நீர்வழங்கல் அமைச்சு மற்றும் அந்தந்த அமைச்சுக்களின் கீழ்வரும் இராஜாங்க அமைச்சுக்கள் ஆகியவற்றின் செலவினங்கள் உள்ளடங்கியுள்ளன.

### நீர்வழங்கலுக்கான ஒதுக்கீடு அதிகரித்துள்ளது. ஆனால் மின்சக்தி அமைச்சுக்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது

**அட்டவணை 3.3.1**: மின்சக்தி, வலு மற்றும் நீர் வழங்கல் துறை செலவின சுருக்கம்

**பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்**

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம்/ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| **மின்சக்தி, வலுசக்தி மற்றும் நீர் வழங்கல் துறை** | **50.0** | **137.7** | **107.5** | **-22.0%** |
| *அரச செலவினத்தின் பங்கு* | *1.70%* | *3.88%* | *2.84%* | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *0.33%* | *0.92%* | *0.72%* | |
| வலுசக்தி அமைச்சு | 0.0 (0.01%) | 0.2 (0.00%) | 0.3 (0.01%) | **52.3%** |
| மின்சக்தி அமைச்சு | 0.8 (0.03%) | 58.3 (1.64%) | 0.3 (0.01%) | **-99.5%** |

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம்/ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | 0.0 (0.00%) | 0.7 (0.02%) | 0.7 (0.02%) | **-1.0%** |
| நீர் வழங்கல் அமைச்சு | 48.8 (1.65%) | 75.8 (2.13%) | 96.1 (2.54%) | **26.8%** |
| கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | 0.4 (0.02%) | 2.8 (0.09%) | 4.3 (0.15%) | **56.3%** |
| தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் | 0.4 (0.02%) | 1.5 (0.05%) | 2.9 (0.10%) | **93.8%** |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 5.8 (0.15%) | வி.கி. |


குறிப்பு: * 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுக்காகவும் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களானது அரச நிறுவனங்களின் செலவினங்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 'அனைவருக்கும் நீர்' திட்டம் (ரூ. 5 பில்லியன்) மற்றும் சூரிய சக்தி மற்றும் கிராமிய மின்சார உற்பத்தித் திட்டங்கள் (ரூ.750 மில்லியன்) ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கியுள்ளன.

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

## *கடந்த காலங்களில் ஒதுக்கீடுகளில் வீழ்ச்சி காணப்பட்டாலும் 2018க்குப் பின்னர் அதிகரித்து வருகின்றது*

**காட்சி 3.3.2:** மின்சக்தி, வலுசக்தி மற்றும் நீர் வழங்கல் செலவினம், பில்லியன் ரூபாவில், 2015 – 2019



## பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் மின்சக்தி, வலுசக்தி மற்றும் நீர் வழங்கலுக்கான மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடு 107.5 பில்லியன் ரூபாவாகும். இது அரசாங்க செலவினத்தின் 2.84மூ சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.72மூ சதவீதத்திற்கும் சமமாகும்.

2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில், 2021 ஆம் ஆண்டுக்கான மொத்தத் துறையின் ஒதுக்கீடுகளானது 22 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இலங்கை மின்சார சபையின் கடனை தீர்ப்பதற்காக 2020 ஆம் ஆண்டில் மின்சக்தி அமைச்சின் செலவினம் அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இத் துறைக்கான ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட பெரும்பான்மையான அரச கொள்கை முன்னுரிமைகள் மின்சக்தி, வலு மற்றும் நீர் வழங்கல் துறையின் வரவு செலவுத் திட்டத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. மின்சக்தி, வலு மற்றும் நீர் வழங்கல் துறைக்கான குறிப்பிட்ட கொள்கை முன்னுரிமைகளும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 3.3.3 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3.3**: 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் அரசாங்கத்தின் மின்சக்தி, வலு மற்றும் நீர் வழங்கல் கொள்கைக் கட்டமைப்பின் ஒப்பீடு

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **1** | **வலுசக்தி** | 2020 ஆம் ஆண்டில் 166 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வலுசக்தி அமைச்சுக்கான மொத்த ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் 253 மில்லியன் ரூபாவாக 52மூ சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. பெற்றோலிய வள அபிவிருத்திச் செயலகத்திற்கான ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டதே இதற்கான காரணமாகும். |
| 1.1 | புவியியல் ஆய்வில் மூன்று வலயங்களில் அடையாளம் காணப்பட்ட இயற்கை வாயு தொடர்பான ஆய்வினை விரைவுபடுத்துதல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 1.2 | கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய சாலையை நவீனமயப்படுத்தலும் திருகோணமலை எண்ணெய் சேமிப்புத்தாங்கிகளை மீளமைத்தலும் | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| **2** | **மின்சக்தி** | 2020 ஆம் ஆண்டில் பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மின்சக்தி அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் 2021 ஆம் ஆண்டில் 313 மில்லிய பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட 58 பில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டுக் கடனே இதற்கான முக்கிய காரணமாகும். |
| 2.1 | கொழும்பு நகரைச் சுற்றியுள்ள எரிபொருளால் இயங்கும் ஆலைகளை இயற்கை எரிவாயு ஆலைகளாக அடுத்த ஆண்டுக்குள் மாற்றுதல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2.2 | 2020 ஆம் ஆண்டில் புரோட்லேன்ட்நீர் மின் நிலையம், 2021 ஆம் ஆண்டில் உமா ஓயா, 2023 ஆம் ஆண்டில் மொறகொல்ல, 2024 ஆம் ஆண்டில் தளப்பிடிகல மற்றும் சீதாவாக்க நீர் மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பித்து இதனூடாக 230 மெகாவோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின் கட்டமைப்புடன் இணைத்தல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 2.3 | 2021 ஆம் ஆண்டில் மன்னாரில் 100 மெகாவோல்ட் காற்றலை மின்உற்பத்தியை முன்னெடுப்பது, நாடு முழுவதும் காற்றலை மற்றும் சூரிய சக்தி மூலமான மின்சார உற்பத்தியை முன்னெடுத்தல் மற்றும் கைத்தொழில் கழிவுகள் மூலமாக மின்சாரத்தை உருவாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்துதல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 2.4 | கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலம் ஊடாக மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கு குறைந்த / இலகு வட்டி வங்கிக் கடன் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் மீள்புதுப்பிக்கக் கூடிய திட்டங்களில் தனியார் துறையினர் முதலீடு செய்வதற்கும் ஊக்குவிக்கப்படும். | குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கூரைகளில் சூரிய மின்கலம் பொருத்துவதற்கான கடன்களை வழங்குவதற்கு வரவு செலவுத் திட்ட உரையில் முன் மொழியப்பட்டுள்ளது. மேலும் புதுப்பிக்கத்தக்க அனைத்து எரிசக்தி திட்டங்களுக்கும் 7 ஆண்டுகள் வரி விடுமுறை வழங்குவதற்கான திட்டமும் வரவு செலவுத் திட்ட உரையில் முன் மொழியப்பட்டுள்ளது. |
| **3** | **நீர் வழங்கல்** | 2020 ஆம் ஆண்டில் 76 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட நீர்வழங்கல் அமைச்சுக்கான ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் 27% சதவீத அதிகரிப்புடன் 96 பில்லியனாக அதிகரித்துள்ளது, 27% சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. |
| 3.1 | இலங்கை நீர்வழங்கல் சபை மற்றும் சமூக நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் விரிவாக்கப்படும். | அனைவருக்கும் நீர் என்ற திட்டத்திற்காக முதல்த் தடவையாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட உரையிலும் 5 பில்லியன் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 3.2 | விவசாய வளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுவதற்கு குறைந்த வட்டிக் கடன்கள் மற்றும் வரிச் சலுகைகள் வழங்கப்படும். | சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப்பம்பிகளை நிறுவுவதற்கு 10,000 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக 150,000 ரூபா வழங்கும் திட்டம் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. எனினும் இந்த திட்டத்திற்காக வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்பிலோ, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலோ எந்த ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படவில்லை. |
| 3.3 | நீர் நிலைகளில் இருந்து பூச்சிகொல்லிகள் மற்றும் பிற இரசாயனக் கழிவுகளை அகற்றுதல் மற்றும் நிலத்தடி நீரைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நீர் சேமிப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 3.4 | தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை அமைப்புகள் மற்றும் நீர் சேமிப்பு மற்றும் நீர் இறைக்கும் முறைகள் ஆகியவற்றைக் கொண்ட வெள்ளக் கட்டுப்பாட்டு பொறிமுறையை உருவாக்குதல் | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |

# 4. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை

வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைக்கான ஒதுக்கீடுகள் கைத்தொழில் அமைச்சு, வர்த்தக அமைச்சு, சுற்றுலா அமைச்சு, அந்தந்த அமைச்சுக்களின் கீழ் வரும் இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் பிற அமைச்சுக்களின் வர்த்தகம் மற்றும் கைத்தொழிலுடன் தொடர்புடைய திணைக்களங்களின் செலவினங்களை உள்ளடக்கியது.

**வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறைக்கான ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் ரூ.5 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.**

**அட்டவணை 4.1**: வர்த்தக மற்றும் கைத்தொழில் செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்**

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்-தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| **வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை** | **7.2** | **12.2** | **17.0** | **39.8%** |
| *அரச செலவினத்தின் பங்கு* | *0.24%* | *0.34%* | *0.45%* | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *0.05%* | *0.08%* | *0.10%* | |
| கைத்தொழில் அமைச்சு* | 4.9 (0.16%) | 3.5 (0.10%) | 3.6 (0.09%) | **1.4%** |
| பருத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சு | 0.1 (0.00%) | 0.5 (0.01%) | 1.1 (0.03%) | **146.3%** |
| நெசவுக் கைத்தொழில் திணைக்களம் | 0.12 (0.00%) | 0.21 (0.006%) | 0.17 (0.005%) | **-15.8%** |
| பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், தளபாடங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | வி.கி. | 0.8 (0.02%) | 1.2 (0.03%) | **61.2%** |

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்-தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு | வி.கி. | 0.1 (0.004%) | 0.3 (0.008%) | **127.0%** |
| வர்த்தக அமைச்சு* | வி.கி. | 4.5 (0.13%) | 5.6 (0.15%) | **23.2%** |
| அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 0.13 (0.00%) | 0.15 (0.00%) | 0.18 (0.00%) | **19.2%** |
| இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | 0.04 (0.00%) | 0.05 (0.00%) | 0.06 (0.00%) | **24.8%** |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | 0.37 (0.01%) | 0.88 (0.025%) | 0.57 (0.015%) | **-35.0%** |
| கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு | 0.1 (0.00%) | 0.7 (0.02%) | 1.0 (0.03%) | **48.0%** |
| கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்) | 0.10 (0.00%) | 0.09 (0.002%) | 0.19 (0.005%) | **120.3%** |
| கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | 0.018 (0.00%) | 0.019 (0.00%) | 0.024 (0.00%) | **26.8%** |
| சுற்றுலா அமைச்சு* | 0.2 (0.01%) | 0.2 (0.01%) | 0.5 (0.01%) | **139.5%** |
| ஏனையவை | 1.9 (0.06%) | 1.9 0.05% | 3.7 0.10% | **96.5%** |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 0.07 | 0.08 (0.00%) | 0.10 (0.00%) | **21.6%** |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 0.07 | 0.07 (0.00%) | 0.08 (0.00%) | **14.6%** |

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019<br>உண்மை | 2020<br>திருத்-தப்பட்டது | 2021<br>பாதீடு | 2020-2021 |
| வாணிபத் திணைக்களம் | 0.15 | 0.14<br>(0.00%) | 0.16<br>(0.00%) | **10.8%** |
| ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் | 1.07 | 1.37<br>(0.04%) | 1.49<br>(0.04%) | **8.1%** |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | | வி.கி. |


குறிப்பு: *மீள்குடியேற்றம், வர்த்தகம் மற்றும் கைத்தொழிலுக்குப் பொருத்தமற்ற பிற பகுதிகளுக்கான ஒதுக்கீடுகள் 2019 இல் அகற்றப்பட்டு கைத்தொழில் அமைச்சு சரிசெய்யப்பட்டது. தென்னக அபிவிருத்திக்கான ஒதுக்கீடு நீக்கப்பட்டு வர்த்தக அமைச்சு 2020 மற்றும் 2021 இல் சரிசெய்யப்பட்டது. தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் மற்றும் கைத்தொழில் அமைச்சுக்கு பொருத்தமில்லாத பிற பகுதிகளுக்கான ஒதுக்கீடுகள் நீக்கப்பட்டு சுற்றுலாத் துறை அமைச்சு 2019 – 21 இல் சரிசெய்யப்பட்டது.

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021)*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

## வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறையில் மூலதனச் செலவினம் மிகவும் குறைவாக செலவிடப்பட்டுள்ளது

**காட்சி 4.2**: வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை செலவினம், பில்லியன் ரூபாவில், 2015 – 2019



## கடந்த காலத்தில் வர்த்தகம் மற்றும் கைத் தொழில் துறைக்கான ஒதுக்கீடு சுமார் 50 சதவீதத்தி-னால் குறைத்து செலவிடப்பட்டுள்ளது

**அட்டவணை 4.3**: கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம் / அமைச்சு | சராசரி வளர்ச்சி (நடைமுறைச் செலவி-னத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான நடைமுறைச் செலவினம் |
|---|---|---|
| **வர்த்தக மற்றும் கைத்தொழில் துறை** | **11.1%** | **45.8%** |
| வாணிபத் திணைக்களம் | 7.9% | 5.0% |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 8.8% | 2.2% |
| அளவுக்கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் | -16.3% | 17.3% |
| இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் | 9.5% | 0.0% |
| உணவு ஆணையாளர் திணைக்களம் | 46.4% | 17.0% |
| கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்) | 7.3% | 8.0% |
| கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | 6.5% | 5.6% |
| நெசவுக் கைத்தொழில் திணைக்களம் | 12.1% | 9.6% |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் | 4.2% | 6.4% |
| ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் | 2.6% | 11.1% |

### பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைக்கான மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடு ரூ.17 பில்லியன் ஆகும். இது அரசாங்க செலவினத்தின் 0.47மூ சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.1மூ சதவீதத்திற்கும் சமமாகும்.

2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் மொத்தத் துறைக்கான ஒதுக்கீடுகள் 40% சதவீதத்தினால் அதிகரித்துள்ளன. 2020 ஆம் ஆண்டில் புதிய இராஜாங்க அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டது மற்றும் வர்த்தக அமைச்சுக்கான ஒதுக்கீடுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இதற்குக் காரணம். முன்னதாக, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செலவினங்கள் குறைந்தாலும் இத் துறை 11.1மூ சதவீத வருடாந்த சராசரி வளர்ச்சியைக் கொண்டிருந்தது.

கடந்த காலங்களில் இத் துறைக்கான ஒதுக்கீடுகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படவில்லை. செலவினத்தின் வருடாந்த சராசரி பற்றாக்குறை 45.8% சதவீதமாகக் காணப்பட்டது.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் வர்த்தகம் மற்றும் கைத்தொழிலின் கீழ் குறிப்பிடப்பட்ட பெரும்பான்மையான கொள்கைகளுக்கு வரி விலக்குகள் மற்றும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைக்கான கொள்கை முன்னுரிமைகளும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 4.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4**: 2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடுகையில் வர்த்தக மற்றும் கைத்தொழில் கொள்கைக் கட்டமைப்பு

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **1** | **ஏற்றுமதி ஊக்குவிப்பு** | 2020 ஆம் ஆண்டில் 610 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட **வெளிநாட்டு வர்த்தக அபிவிருத்தித் திட்டத்திற்கான** ஒதுக்கீடு 2021 ஆம் ஆண்டில் 1,010 மில்லியன் ரூபாவாக அதிகரித்ததுள்ளது. |
| 1.1 | சகல மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தொழில் பேட்டை, சுதந்திர வர்த்தக வலயம், சுதந்திர துறைமுகங்கள் அமைக்கப்படும். | தொழில்துறை வலயத்தின் அபிவிருத்தியின் கீழ் 1,900 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| 1.2 | ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளை தங்கு தடையில்லாமலும் கால விரயத்தைத் தடுக்கும் வகையிலும் வினைத்திறனான சேவையை முன்னெடுக்க தனியான ஒன்றிணைக்கப்பட்ட பொறிமுறை நிறுவப்படும் | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 2 | **இரத்தினக் கல் மற்றும் தங்காபரணம் ஆபரணம்** உற்பத்திக்குத் தேவையான நவீன அதி உயர் தொழிநுட்ப கருவிகளுக்கு இறக்குமதி வரி நீக்கப்படும் | நவீன தொழில்நுட்பத்துடனான இயந்திரங்களின் இறக்குமதிக்கு **வரி விலக்கு அளிக்க** வரவு செலவுத் திட்ட உரையில் **முன்மொழியப்பட்டுள்ளது.** |
| 3 | **சுற்றுலாத் துறை** | **சுற்றுலாத் துறைக்கான ஒதுக்கீடு** 2021 இல் 140 சதவீதத்தினால் **அதிகரித்துள்ளது.** மன்னார் மடுவில் தங்குமிட நிர்மாணத்திற்காக மேலதிகமாக 266 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டமையே இதற்கான முக்கிய காரணமாகும். |
| 3.1 | கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை விமான நிலையங்களில் குடிவரவு குடியகல்வு நடவடிக்கைகளை செயல்த்திறன் மிக்கதாக்கல் உள்நாட்டு பயணங்களுக்காக 2 முனையங்கள் உருவாக்கப் படுவதுடன், உள்ளக விமான நிலையங்களை நவீன மயப்படுத்தல். | சிவில் விமான மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் விமான நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை |
| 3.2 | வீதி சந்திப்புக்களில் சுற்றுலா சேவை மத்திய நிலையங்களை உருவாக்குதல், ஒற்றை முன்பதிவு மென்பொருள் அமைப்பு (ளைபெடந டிழழமபைெ ளழகவறயசந ளலளவநஅ) மற்றும் சகல சுற்றுலா இடங்களுக்குமான இலத்திரனியல் கேட் முறையை (electronic gate systems) நிறுவுதல், மற்றும் உயர் தர சுற்றுலா ஹோட்டல்களை உருவாக்குவதை ஊக்குவித்தல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை** |
| 3.3 | சுற்றுலா நகரங்களில் சுற்றுலா பயிற்சிப் பாடசாலைகளை உருவாக்குதல் அத்துடன் சுற்றுலாத் துறையில் பணியாற்றுபவர்களின் எண்ணிக்கையை 1 மில்லியனாக அதிகரித்தல். | **திறன் விருத்தி பயிற்சிகளுக்காக 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.** |
| 3.4 | உள்நாட்டு மற்றும் சமூகம் சார்ந்த சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். | **சமூகம் சார்ந்த சுற்றுலாத் துறைக்கு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.** |
| **4** | **ஆடைக் கைத்தொழில்** | பத்திக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்திகள் இராஜாங்க அமைச்சுக்கான ஒதுக்கீடு 2021 இல் 61 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 4.1 | முதலீட்டு சபை மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவினால் திட்டமிடப்பட்டுள்ள ஆடைத்தொழிற்சாலை நகரத்தை அமைப்பதற்கு ஏறாவூர் பிரதேச சபையில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 200 ஏக்கர் காணி ஒதுக்கப்படும். | மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு **புதிய தீர்வை முறை முன்மொழியப்பட்டுள்ளது.** எனினும் வரி முறைமை குறித்த மேலதிக எந்த தகவல்களும் வழங்கப்படவில்லை. |
| 4.2 | பல்வேறு உயர் தொழில்நுட்ப பொருட்களின் தயாரிப்புக்களைத் தொடங்கும் பாரிய அளவிலான வர்த்தகங்களுக்கு வசதிகள் வழங்கப்படும். | பாரிய அளவிலான முதலீடுகள் மற்றும் நவீன இயந்திரங்களின் இறக்குமதிக்கு வரவு செலவுத் திட்ட உரையில் **பல்வேறு வரி விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.** |

**அட்டவணை 4.5**: வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறை சம்பந்தமான வரி மாற்றங்களின் பட்டியல்

| கொள்கைகள் | வரி மாற்றங்கள் |
|---|---|
| பொது | ஏற்றுமதிக் கைத்தொழில்கள், பாற்பண்ணை,ஆடைக் கைத்தொழில், சுற்றுலாத் துறை, விவசாய உற்பத்திகள், பதப்படுத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளினூடாக பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்களுக்கு பங்களிக்கின்ற, 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை விஞ்சுகின்ற முதலீடுகளுக்கு உபாய அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் ஆகக்கூடியது 10 வருடங்கள் வரை சலுகை வழங்கப்படும். |
| பொது | நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திர சாதனங்களின் மீதான இறக்குமதிகளுக்கு வரிவிலக்கு |
| பொது | உள்நாட்டு உற்பத்திகளின் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கு செஸ் (CESS) வரியினை விதித்தல் |
| பொது | நாட்டில் கிடைக்கப்பெறாத மூலப்பொருட்கள், ஏற்றுமதியினை ஊக்குவிக்கின்ற மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவிக்கின்ற நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான இறக்குமதி வரிகளை நீக்குதல். |
| ஏற்றுமதி ஊக்குவிப்பு | தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைகள் வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் மற்றும் இலங்கையில் வசிப்பவராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களது வருமானத்துக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். |
| ஏற்றுமதி ஊக்குவிப்பு | சர்வதேச வர்த்தகத்தில் மொத்தப் பொருள் பரிமாற்றத்திற்கான மத்திய நிலையங்களாக கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டையினை ஊக்குவிக்கும் வகையில் பிணைக்கப்பட்ட பண்டக சாலைகள் மீதான முதலீடுகளை ஊக்குவிப்பதனுடன் குறித்த பிணைக்கப்பட்ட பண்டக சாலைகள் மீதான வாடகைக் கட்டணங்கள் மற்றும் அனைத்து வரிகளிலிருந்தும் அத்தகைய முதலீடுகளுக்கு விலக்களிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| ஏற்றுமதி ஊக்குவிப்பு | குளிரூட்டிகளைப் பெறுவதற்கு தீர்வைச் சலுகை மற்றும் கடன் வசதிகள் வழங்கப்படும். |
| ஏற்றுமதி ஊக்குவிப்பு | புதிய உற்பத்திகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி வரி குறைப்பு |
| ஏற்றுமதி ஊக்குவிப்பு | வெளியில் காணப்படாத உட்செறிவான கனிய மணல், பொசுபேற்று, உரம் மற்றும் கிரபைட் போன்றவற்றை உபயோகித்து செய்யப்படும் பிரபல்யமற்ற கைத்தொழில்களை அதிக மதிப்புள்ள ஏற்றுமதி தொழில்களாக உருவாக்குவதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கு ஏற்படும் செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்கும் நெனோ தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு வரி விலக்கு அளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| ஆடைக் கைத்தொழில் | பதிக் மற்றும் அது சார்ந்த ஆடைத்தொழிலினை தேசியக் கைத்தொழிலாக அபிவிருத்தி செய்வதற்கு தேசிய குறியீட்டு இலக்கத்தின் கீழ் பதிக் உற்பத்தி இறக்குமதியினை தடை செய்தல். |

| கொள்கைகள் | வரி மாற்றங்கள் |
|---|---|
| ஆடைக் கைத்தொழில் | வெளிநாட்டவர்கள் மற்றும் உல்லாசப் பிரயாணிகளுக்கு தேவையான உயர்தர ஆடைகள் மற்றும் தோற்பொருட்களின் உற்பத்தியினை அதிகரிக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆடைத் தயாரிப்பு மையமாக உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றுக்கு தேவையான இறக்குமதியினை இலகுபடுத்தித் புதிய தீர்வை முறைமையினை செயற்படுத்தல். |
| சுற்றுலாத்துறை | சுற்றுலா தொழிற்துறை நடவடிக்கைகளில் உள்ளூராட்சி நிறுவனங்கள் அறவிடுகின்ற வரி மற்றும் கட்டணங்களை இலகுபடுத்தி அதிகபட்ச தொகையினை வரையறுப்பதற்கு தேவையான திருத்தங்கள் செய்யப்படும் |

# 5. சுற்றாடல் துறை

சுற்றாடல் துறைக்கான ஒதுக்கீடுகள் சுற்றாடல் அமைச்சு, வனவிலங்குகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு, வனவிலங்குகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், மீள் காடமைப்பு மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்கியது. அத்துடன் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் தேசிய தாவர பூங்காக்கள் திணைக்களத்தையும் உள்ளடக்கியது. வரவு செலவுத் திட்ட உரையில் முன்மொழியப்பட்ட திட்டங்களின் விளைவாக, 2021 ஆம் ஆண்டில், சுற்றாடல் துறைக்கான ஒதுக்கீடு இரட்டிப்பாகியுள்ளது.[1]

**அட்டவணை 5.1**: சுற்றாடல் துறை செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்**

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம்/ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| **சுற்றாடல் துறை** | **9.14** | **8.94** | **18.30** | **105%** |
| *அரச செலவினத்தின் பங்கு* | *0.31%* | *0.25%* | *0.48%* | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *0.06%* | *0.06%* | *0.10%* | |
| சுற்றாடல் அமைச்சு | 2.49<br>0.1% | 1.28<br>0.0% | 2.00<br>0.1% | **55.8%** |
| வனவிலங்குகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு | வி.கி. | 1.46<br>0.04% | 1.24<br>0.03% | **-15.1%** |
| வனவிலங்குகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், மீள் காடமைப்பு மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | 4.86<br>0.16% | 4.80<br>0.14% | 6.11<br>0.17% | **27.4%** |

1 கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களமானது நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ளது. தேசிய தாவரங்கள் பூங்கா திணைக்களம் சுற்றுலாத் துறை அமைச்சின் கீழ் வருகின்றது.

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம்/ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020-2021 |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 2.24<br>0.08% | 2.08<br>0.06% | 2.54<br>0.07% | **22.3%** |
| வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் | 1.70<br>0.06% | 1.77<br>0.05% | 2.16<br>0.06% | **21.9%** |
| தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் | 0.92<br>0.03% | 0.91<br>0.03% | 1.29<br>0.04% | **41.5%** |
| ஏனையவை | 1.79<br>0.06% | 1.4<br>0.04% | 2.26<br>0.06% | **60.7%** |
| கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் | 0.63<br>0.02% | 0.72<br>0.02% | 1.14<br>0.03% | **58.0%** |
| தேசிய தாவர பூங்காக்கள் திணைக்களம் | 0.89<br>0.03% | 0.68<br>0.02% | 1.12<br>0.03% | **63.4%** |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 6.7<br>0.18% | வி.கி. |


குறிப்பு: 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுக்காகவும் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களானது அரச நிறுவனங்களின் செலவினங்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடகளானது "சுரக்கிமு கங்கா (நதிகளைப் பாதுகாப்போம்)" செயல்த் திட்டத்திற்காக 200 மில்லியன் ரூபாவினையும் வப்பாதுகாப்புத் திட்டங்களுக்கு 3500 மில்லியன் ரூபாவினையும் மனிதனுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதலைக் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களுக்காக 3000 மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடுகளாக உள்ளடக்கியுள்ளன

*மூலம்: உத்தேச வரவுசெலவுத் திட்ட வரைவு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

## கடந்த காலங்களில் சுற்றாடல் துறைக்கான மூலதனச் செலவினம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது

**காட்சி 5.2:** சுற்றாடல் துறை செலவுகள், பில்லியன் ரூபாவில், 2015 – 2019




## சில திணைக்களங்களில் செலவினத்தில் குறைவான வளர்ச்சி மற்றும் செலவிடுவதில் குறிப்பிடத்-தக்க பற்றாக்குறை காணப்படுகின்றது

**அட்டவணை 5.3:** கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம் / அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவினத்தில்) | சராசரிப் பற்றா-க்குறை (மதிப்பீடுகளு-க்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| **சுற்றாடல் துறை** | **2.9%** | **19.5%** |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 2.5% | 2.3% |
| வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் | 2.9% | 9.1% |
| தேசிய மிருகக்காட்சி சாலைகள் திணைக்களம் | 2.6% | 15.0% |
| கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் (நடைமுறை) | -19.3% | 32.4% |
| தேசிய தாவர பூங்காக்கள் திணைக்களம் (நடைமுறை ) | 7.2% | 2.9% |
| ஏனைய அமைச்சரவை ஒதுக்கீடுகள் | 7.4% | 39.6% |

## பகுப்பாய்வு

2021 ஆம் ஆண்டில் சுற்றாடல் துறைக்கான ஒதுக்கீடு 18.3 பில்லியன் ரூபாவாகும். இது அரசாங்க செலவினத்தின் 0.48% சதவீதத்திற்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.1% சதவீதத்திற்கும் சமமாகும்.

2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் துறைக்கான ஒதுக்கீடுகள் இரட்டிப்பாகியுள்ளன. வனப் பாதுகாப்பு மற்றும் மனிதன் - யானைகளுக்கு இடையிலான மோதல்களைக் களைதல் போன்றவற்றுக்காக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களே இதற்கான பிரதான காரணமாகும். வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு தவிர, அட்டவணை 5.1 இல் ஆய்வு செய்யப்பட்ட அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குமான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இத் துறையில் குறைவாக செலவு செய்யப்படுவதை கடந்த கால அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளுக்கும், உண்மையில் செலவு செய்யப்பட்ட தொகைகளுக்கும் இடையில் சராசரியாக 19.5% வித்தியாசம் காணப்படுகின்றது.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் சுற்றாடல் துறையின் கீழ் குறிப்பிடப்பட்ட பெரும்பாலான கொள்கைகளுக்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றாடல் துறைக்கான கொள்கை முன்னுரிமைகளும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 5.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.4**: 2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் அரசாங்கத்தின் சுற்றாடல் கொள்கைக் கட்டமைப்பு ஒப்பிடப்படுகின்றது

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **1** | **கழிவு களை நீக்குதல்** | |
| 1.1 | சமூகங்களின் விழிப்புணர்வையும் செயல்த் திறம் மிக்க ஈடுபாட்டையும் அதிகரிக்கக் கூடிய வகையிலான செயல்த் திட்டங்கள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். | பல்வேறு சுற்றாடல் கல்வித் திட்டங்களுக்காக சுற்றாடல் அமைச்சு 131 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. இத் திட்டங்கள் பலவற்றுக்கான செலவினங்கள் 2020 ஆம் ஆண்டில் குறைக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்பட்டுள்ளன. |
| 1.2 | "வைத்தியசாலைக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளை (இரசாயனம்) அகற்றுவதற்கான உரிய வழிமுறைகளை அமைத்து, நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்ட எரியூட்டிகள் அறிமுகப்படுத்தப்படும். | வைத்தியசாலை மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளை அகற்றுவதற்கான ஒதுக்கீடுகள் குறித்து 2021 ஆம் ஆண் டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| **2** | **காடுகள்** | |
| 2.1 | நிலையான விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் தோட்ட விவசாயத்தை மேம்படுத்த விஞ்ஞான முறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தரிசு / கைவிடப்பட்ட நிலங்களை விவசாய மற்றும் வன நிலங்களாக மாற்றுவதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல். | கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் காடுகளை வளர்ப்பதற்கு வன விலங்குப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு 5 மில்லிய ன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2.2 | நகர்ப்புறக் காடுகள், பசுமையான பாதைகள், பசுமைக் கூரைகள் மற்றும் வேளாண்மைப் பயிர்கள் / விலங்குகள் போன்றவற்றை வளர்ப்பதோடு மரங்கள், புதர்கள், பாம்ஸ் தாவரங்கள், மூங்கில் போன்றவற்றை (வேளாண்மை வன அமைப்புகளை) நிறுவுவதற்கு தொழில்த்துறை நிறுவனங்களை ஊக்குவிப்பதோடு புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டைச் செய்யாமல் இருக்கச் செய்வதற்கும் அத்துடன் போக்குவரத்து மற்றும் தொழிற்சாலைகள், கட்டட நிர்மானப் பணிகளின் போது காபன் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளவும் ஊக்குவிக்கப்படும். | கிராமிய மட்டத்தில் தொழில்முயற்சிகளில் ஈடுபட்டு வரும் தனியாருக்கு சூரிய மின்நிலையங்களை நிறுவுவதற்ககான வசதிகளைச் செய்து கொடுப்பது குறித்து வரவு செலவுத் திட்ட உரையில் முன்மொழியப்பட்டதுடன் அதற்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேறு வரிச் சலுகைகளைப் பற்றியோ வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பற்றியோ குறிப்பிடப்படவில்லை. |
| 2.3 | நகர மற்றும் புற நகர்ப்பகுதிகளில் பூங்காக்களை உருவாக்குதல், மற்றும் அதிவேக பாதை ஓரங்களில் வரிசை மரநடுகை முறையை அபிவிருத்தி செய்தல், தொழிற்சாலைகளை அண்டிய பகுதிகளில் மரங்களை நடுவது உட்பட மீள் காடாக்கத்திற்குப் பொருத்தமான பகுதிகளை அடையாளம் காண உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும | பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் மர நடுகையை அறிமுகப்படுத்துவதற்கு வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு 10 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.<br><br>அத்துடன் வன மற்றும் சதுப்பு நிலப் பாதுகாப்பிற்காக வனவிலங்குப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு 121 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளதுடன், புதிய களை உருவாக்குவதற்கு 545 மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடு செய்துள்ளது. |
| **3** | **கடலோரப் பாதுகாப்பு** | |
| 3.1 | நாட்டின் பல பகுதிகளில் வேகமாக இடம்பெற்றுவரும் கடலரிப்பைத் தடுப்பதற்கான உடனடி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். | நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு கடலோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத்துக்காக 518 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. |
| 3.2 | சுவ திவிமக திட்டத்தை அறிமுகப் படுத்தல் - நிலையான சுற்றாடல் கொள்கையை உருவாக்குவதன் மூலம் காற்று, நீர் மற்றும் நிலம் ஆகியன மாசடைவதைத் தடுத்து ஆரோக்கியமான சுற்றாடலை உருவாக்குதல் | சுற்றாடல் மாசடை வதனைத் தடு த்தல், நிலையான சுற்றாடல் கொள்கை ஆகியவற்றின் பரந்த செயற்பாட்டிற்காக சுற்றாடல் அமைச்சு 97 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. இத் தொகையில் இருந்து 50 பில்லியன் ரூபாவினையும் 12 மில்லியன் ரூபாவினையும் உபயோகித்து இவ்வாண்டில் இரண்டு பாரிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.<br><br>நகர அபிவிருத்தி, கடலோரப் பாதுகாப்பு, கழிவுப்பொருள் வெளியேற்றம் மற்றும் துப்புரவு ஏற்பாட்டு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு கடலோர மாசுபாட்டைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களுக்காக மேலும் 563 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. |

# 6. கல்வித் துறை

கல்வித் துறைக்கான ஒதுக்கீடுகள் பின்வரும் அமைச்சுக்களின் செலவினங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது:[2] **பொதுக்கல்வி** – கல்வி அமைச்சு (பொதுக் கல்வி தொடர்பான செலவினங்கள்), மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு (மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ்); **உயர் கல்வி**[3] – கல்வி அமைச்சு (உயர் கல்வியுடன் தொடர்புடைய செலவினங்கள்), கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு; **தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி**[4] – வுஏநுவு (திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ்); **ஏனையவை** – அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனா மற்றும் பிக்கு கல்வி இராஜாங்க அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழு.

## பல்கலைக்கழக கல்வி தவிர கல்விக்கான செலவினங்கள் பெரும்பாலும் மாறாமல் உள்ளன

**அட்டவணை 6.1**: கல்வித்துறை செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்**

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020 | 2021 |
| **கல்வித் துறை** | **158.9** | **162.0** | **175.2** | **8.1%** | |
| *அரச செலவினத்தின் பங்கு* | *5.4%* | *4.6%* | *4.6%* | | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *1.1%* | *1.0%* | *1.0%* | | |
| பாடசாலைக் கல்வி | 78.07 | 79.14 | 78.28 | **-1.1%** | |
| | 2.6% | 2.2% | 2.1% | | |

2 கல்வித் துறைக்கு தொடர்பில்லாத செலவின முகவரகங்களை தவிர்க்கும் வகையில் அமைச்சுக்களின் செலவின ஒதுக்கீடுகள் சரி செய்யப்பட்டுள்ளன.

3 2019 இல் இந்தப் பிரிவு நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சுக்குப் பொருத்தமான ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கியிருந்தது.

4 2019 இல் இந்தப் பிரிவு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் திறன் விருத்திப் பிரிவு, நீண்டகாலம் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்கல்வி பயற்சி மற்றும் திறன் விருத்திக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கியிருந்தது.

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்-தப்பட்டது | 2021 பாதீடு | 2020 | 2021 |
| பல்கலைக்கழகக் கல்வி | 71.05<br>2.4% | 73.00<br>2.1% | 76.79<br>2.1% | **5.2%** | |
| TVET | 9.73<br>0.3% | 9.82<br>0.3% | 10.07<br>0.3% | **2.6%** | |
| ஏனையவை | 0.04<br>0.0% | 0.04<br>0.0% | 0.05<br>0.0% | **5.9%** | |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 10.0<br>0.3% | வி.கி. | |


குறிப்பு: 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுக்காகவும் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களானது அரச நிறுவனங்களின் செலவினங்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளாது 'தொலைக் கல்விக்காக 3000 மில்லியன் ரூபாவினையும் தொழிற்கல்விக்காக 3000 மில்லியன் ரூபாவினையும் கிராமியப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 3000 மில்லியன் ரூபாவினையும் பல்கலைக்கழக உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 1000 மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடுகளாக உள்ளடக்கியுள்ளன.

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

## கல்விக்கான நடைமுறை மூலதனச் செலவினம் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டை விட குறிப்பிடத்-தக்க அளவு குறைவாகும்

**வரைபடம் 6.2**: கல்வித்துறையின் செலவினம், பில்லியன் ரூபாவில், 2015 - 2019



## கடந்த காலங்களில் பொதுக் கல்விக்கான செலவினத்தில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை காணப்படுகின்றது

**அட்டவணை 6.3**: கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம் / அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவினத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| **கல்வித் துறை** | **9.2%** | **26.3%** |
| பாடசாலைக் கல்வி | 7.6% | 32.0% |
| பல்கலைக்கழகக் கல்வி | 13.4% | 12.1% |
| TVET | 5.1% | 21.7% |
| ஏனையவை | 9.5% | 16.4% |

### பகுப்பாய்வு

கல்வித் துறைக்கான ஒதுக்கீடுகள் 2019 ஆம் ஆண்டு முதல், 2021 ஆம் ஆண்டு வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதமாகவும், 2020, 2021 ஆம் ஆண்டுகளில் 4.6 சதவீதமாகவும் மாற்றமில்லாமல் காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இத் துறைக்கான செலவினம் 2021 ஆம் ஆண்டில் 13.2 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் மொத்த வரவு செலவுத் திட்டத்தின் விகிதமாகக் கருத்தில் கொள்ளும் போது இத் துறைக்கான ஒதுக்கீடுகள் குறைவடைந்துள்ளன. 2019 ஆம் ஆண்டில் 5.4% சதவீதமாகவும், 2020 ஆம் ஆண்டில் 4.6% சதவீதமாகவும், காணப்பட்ட கல்விக்கான செலவினம் 2021 ஆம் ஆண்டில் அதே மட்டத்திலேயே மாறாமல் உள்ளது.

பொதுக்கல்வி மற்றும் வுஏநுவு க்கான ஒதுக்கீடுகள் பல்கலைக்கழக கல்விக்கான செலவினத்தை விடக் குறைவாகும். 2021 ஆம் ஆண்டில் பொதுக்கல்விக்கான செலவினம் 1.1% சதவீதத்தினால் குறைவடைந்த அதேவேளை, வுஏநுவு க்கான செலவினம் 2.6 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ்விரண்டு பிரிவுகளும் வரலாற்று ரீதியாக குறைந்த அளவிலான வளர்ச்சி விகிதங்களைக் காட்டுவதோடு, பல்கலைக்கழக கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க மிகக் குறைவான அளவையே செலவிட்டுள்ளதையும் காட்டுகின்றன.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் கல்வித்துறையின் கீழ் குறிப்பிடப்பட்ட பெரும்பாலான கொள்கைகளுக்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. கல்வித் துறைக்கான கொள்கை முன்னுரிமைகளும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 6.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.4**: 2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் அரசாங்க கல்விக் கொள்கைக் கட்டமைப்பை ஒப்பிடுதல்

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **1** | **பாடசாலைக் கல்வி** | |
| 1.1 | இலவசக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்தல். | பாடசாலைக் கல்விக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படவில்லை. உண்மையில் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு 0.86 பில்லியன் ரூபா குறைவாகும். 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒதுக்கீடுகள் மாறாமல் ஒரே அளவாக இருக்கின்றன. |
| 1.2 | தேவையுள்ள பாடசாலைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை வழங்குவதுடன், கஷ்ட மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குதல். | தேவையுள்ள பாடசாலைகளுக்கென குறிப்பாக எவ்விதமான ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான மொத்த ஒதுக்கீடுகளும், *பாடசாலை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பொதுக் கல்வி அபிவிருத்தித் திட்டம்* ஆகிய தலைப்புக்களின் கீழ் உள்ளன. இவ்விரண்டுக்குமான மொத்த ஒதுக்கீடு 2020 ஆம் ஆண்டில் 13,491 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதோடு 2021 ஆம் ஆண்டில் 4,496 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. |
| 1.3 | ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் உள்ள 3 பாடசாலைகளையும், மாகாண மட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் தேசியப் பாடசாலைகளாக தரம் உயர்த்துதல் | தேசியப் பாடசாலைகளை உருவாக்குவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் கீழ் **புதிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.**<br><br>தேசியப் பாடசாலைகள் இல்லாத பிரதேச செயலகப் பிரிவுகளில் தேசியப் பாடசாலைகளை உருவாக்குவதற்கு 950 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>1000 மேல்நிலைப் பாடசாலைகளின் வசதிகளை அதிகரித்து தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்துவதற்கு 1இ000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மும்மொழி தேசியப் பாடசாலைகளை உருவாக்குவதற்கு மேலும் 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>கிராமியப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கும், 1,000 தேசிய பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்திற்காகவும், 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் மேலதிகமாக .3,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 1.4 | கட்டாய ஆசிரியர் பயிற்சியை வழங்கிய பின்னர், ஆசிரியர்கள் அரச சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதறகான தகுதி உடையவர்களாகக் கருதப்படுவார்கள். | கல்வி அமைச்சின் ஆசிரியர் மேம்பாட்டுக்கான ஒட்டுமொத்த செலவு 2021 ஆம் ஆண்டில் 3,604 மில்லியன் ரூபாவிலிருந்து 3,271மில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், மாநில கல்வி சீர்திருத்த அமைச்சினால் 2021 ஆம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சி மற்றும் துறை சார்ந்த வளர்ச்சிக்கு மேலும் 1200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . இது அமைச்சின் வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 60% ஆகும். |

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1.5 | அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் முன்பள்ளியொன்றும் மதிய நேரக் காப்பகம் ஒன்றும் மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் உருவாக்கப்படும். | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அதன் வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 3% சதவீதத்தை (967 மில்லியன் ரூபா).முன் பள்ளி கல்வி தொடர்பான முயற்சிகளுக்குப் பயன்படுத்துகின்றது இதில் 500 மில்லியன் ரூபா பாரிய ஒதுக்கீடு ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் ஒரு முன்பள்ளியை நிறுவுவதற்காக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதோடு மதிய நேரக் காப்பகங்களையும் சனசமூக நிலையங்களையும் அபிவிருத்தி செய்வதற்காக மேலும் 20 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்து. |
| 1.6 | ஆரம்பப் பாடசாலைகளை 'பிள்ளை நேயப் பாடசாலைகளாக' அபிவிருத்தி செய்வதோடு 50,000 ஆசிரிய உதவியாளர்களை நியமித்தல் | பிள்ளை நேயப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டில் 400 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. இத் துறையிலுள்ள முக்கியமான மூன்று அமைச்சுக்களின் சம்பளங்கள் மற்றும் வேதனங்களின் செலவினங்கள் 2021 ஆம் ஆண்டில் 30.9 பில்லியன் ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது சற்றுக் குறைவான (31.4 பில்லியன் ரூபா) ஒதுக்கீடாகும். எனவேஇது 50,000 ஆசிரிய உதவியாளர்களை பணியமர்த்தும் கொள்கையை ஆதரிக்கவில்லை. |
| 1.7 | பாடசாலைச் சீருடைகள், பாதணிகள் மற்றும் பாடசாலைப் பைகளை வாங்குவதற்கு பாடசாலை மாணவர்களுக்கு மானிய விலையில் வவுச்சர்களை விநியோகித்தல். | பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் மற்றும் பாதணிகளை வழங்குவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு 4,200 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. 2020 ஆம் ஆண்டிலும் அதே தொகை ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டி ற்கான செலவினம் 4,429 மில்லியன் ரூபாவாகும். |
| 1.8 | மாணவர்களின் போஷாக்கினை மேம்படுத்துவதற்கு பாடசாலையில் போஷாக்கான உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தல். | முன்பள்ளிச் சிறார்களுக்கும் ஆரம்ப மற்றும் மேல்நிலை பாடசாலை மாணவர்களுக்கும் உணவு வழங்குவதற்காக 5,936 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது |
| **2** | **உயர்கல்வி** | |
| 2.1 | ஏற்கனவேயுள்ள 18 தேசிய கல்வியற் கல்லூரிகள் பல்கலைக்கழக பீடங்களாக்கப்படும். | இத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக **2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை**<br><br>**எவ்வாறாயினும்** 2019 ஆம் ஆண்டில் 23.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட கல்வித் துறையின் மூலதனச் செலவினம், 2020 ஆம் ஆண்டில் 20.9 பில்லியன் ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான உத்தேசப் பெறுமானங்களுக்கு இணங்க 20.7[5] பில்லிய ன் ரூபாவாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்துள்ளமையை இது காட்டுகின்றது. |
| 2.2 | 21 ஆம் நூற்றாண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 'ஸ்மார்ட் கற்றல் பல்கலைக்கழகங்களாக' மாற்றுவதற்கு பல்கலைக்கழகங்களை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். | |
| 2.3 | விமான சேவை பல்கலைக்கழகம், சமுத்திரப் பல்கலைக்கழகம் மற்றும் தற்போதுள்ள நுண்கலைப் பல்கலைக்கழகங்களுக்கு இணைவாக 10 'பல்கலைக்கழக கல்வியற் கல்லூரிகள்' ஆரம்பிக்கப்படும். | |

5 2019 இல் இந்தத் துறை அப்போது சுற்றாடல் அமைச்சின் கீழ் அறிக்கையிடப்பட்ட மகாவலி அபிவிருத்தி தொடர்பான செலவினங்களை உள்ளடக்கியிருந்தது.

| # | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2.4 | மஹாபொல மற்றும் மாணவர் உதவித் தொகைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | 2019 ஆம் ஆண்டில் 1,964 மில்லியன் ரூபாவாகவும் 2020 ஆம் ஆண்டில் 2,125 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்ட மஹாபொல உதவித் தொகைக்கான ஒதுக்கீட்டுத் தொகை ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 2,000 மில்லியன் ரூபாவாகும். |
| **3** | **TVET** | |
| 3.1 | 'One TVET' எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஏற்கனவே உள்ள தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை மாற்றியமைத்தலும் தொழில்நுட்ப பல்கலைக்கழகக் கல்லூரிகளை உருவாக்குதத்தலும் | 'One TVET' எண்ணக்கருவின் கீழான முயற்சிகளுக்கு திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டில் 5 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. மேலும் 'One TVET' எண்ணக்கருவின் கீழ் தரநிர்ணயம் செய்யப்படும் தனியார் துறை கல்வி நிறுவனங்கள் மாணவர் அனுமதியை குறைந்த பட்சம் 50,000 வரை இரட்டிப்பாக்கினால் வரி விலக்கு அளிப்பதற்கான திட்டமும் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| 3.2 | தமிழ் மொழி மூலமான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் தொழிற்கல்விக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கிளையொன்றை ஹட்டனில் நிறுவப்படும். | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட த்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |

# 7. விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் துறை

கமத்தொழில் அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் பின்வரும் பகுதிகள் மற்றும் அவற்றுக்குரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை உள்ளடக்கியுள்ளன:

- **கமத்தொழில் மற்றும் கிராமியப் பொருளாதாரம்** - கமத்தொழில் அமைச்சு நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு.

- **தோட்டக்கலை மற்றும் பயிர்ச்செய்கை** - பெருந்தோட்ட அமைச்சு கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள், தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்துதல் மற்றும் தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுதோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு.[6]

- **கடற்றொழில்** - கடற்றொழில் அமைச்சு அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு.

- **நீர்ப்பாசனம்** - நீர்ப்பாசன அமைச்சு மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்கள் மற்றும் குடியிருப்புக்களின் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு கிராமிய வயல்கள் மற்றும் அது சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு.

6 இந்தத் துறைக்கான செலவினக் கணக்கீட்டில் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் உள்ளடக்கப்படவில்லை.

## துறைக்கான செலவினங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன

**அட்டவணை 7.1:** விவசாயத் துறை செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்**

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்-தப்பட்டது | 2021 பாதீடு | 2020 2021 |
| **கமம் மற்றும் கடற்றொழில் துறை**<br>*அரச செலவினத்தின் பங்கு*<br>*மொ.உ.உ இன் பங்கு* | **124.9**<br>*4.22%*<br>*0.83%* | **137.8**<br>*3.88%*<br>*0.86%* | **164.5**<br>*4.34%*<br>*0.94%* | **19.4%** |
| கமத்தொழில் அமைச்சு | 71.1<br>2.40% | 16.4<br>0.46% | 24.1<br>0.64% | **47.2%** |
| கமத்தொழில் திணைக்களம் | 6.3<br>0.21% | 5.9<br>0.17% | 7.2<br>0.19% | **21.2%** |
| நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு | 9.0<br>0.30% | 13.5<br>0.38% | 18.7<br>0.49% | **38.2%** |
| கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 9.0<br>0.30% | 9.5<br>0.27% | 10.0<br>0.26% | **5.4%** |
| உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு | வி.கி. | 35.1<br>0.99% | 35.7<br>0.94% | **1.8%** |
| கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு | 1.4<br>0.05% | 1.8<br>0.05% | 2.8<br>0.07% | **61.6%** |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 1.4<br>0.05% | 1.3<br>0.04% | 1.4<br>0.04% | **14.6%** |
| கடற்றொழில் அமைச்சு | 0.75<br>0.03% | 1.36<br>0.04% | 4.58<br>0.12% | **237%** |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 0.75<br>0.03% | 0.85<br>0.02% | 0.76<br>0.02% | **-11.0%** |

| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்-தப்பட்டது | 2021 பாதீடு | 2020 2021 |
| அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு | வி.கி. | 4.2<br>0.12% | 3.8<br>0.10% | **-10.9%** |
| பெருந்தோட்ட அமைச்சு | 6.5<br>0.22% | 1.4<br>0.04% | 1.3<br>0.03% | **-9.3%** |
| கம்பனி தோட்டங்களை மறுசீரமைத்தல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள், தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் ற்றும் தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | 0.96<br>0.03% | 5.44<br>0.15% | 5.87<br>0.15% | **7.9%** |
| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | 0.96<br>0.03% | 1.41<br>0.04% | 1.33<br>0.04% | **-5.7%** |
| தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு | வி.கி. | 2.2<br>0.06% | 2.5<br>0.07% | **17.8%** |
| கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுதோட்ட பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு | வி.கி. | 2.3<br>0.07% | 2.8<br>0.07% | **20.2%** |
| நீர்ப்பாசன அமைச்சு | 12.2<br>0.41% | 50.4<br>1.42% | 46.6<br>1.23% | **-7.6%** |
| நீர்ப்பாசனத் திணைக்களம் | 12.2<br>0.41% | 11.6<br>0.33% | 14.7<br>0.39% | **26.3%** |
| மகாவலி வலயங்கள் சார்ந்த கால்வாய்கள் மற்றும் குடியிருப்புக்களின் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | வி.கி. | 3.5<br>0.10% | 7.3<br>0.19% | **104.8%** |
| கிராமிய வயல்கள் மற்றும் அது சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | வி.கி. | 0.1<br>0.00% | 3.1<br>0.08% | **2563.8%**<br>**Vidait*** |
| ஏனையவை* | 23.1<br>0.78% | 0.0<br>0.00% | 0.0<br>0.00% | **0.0%** |


| அமைச்சு / இராஜாங்க அமைச்சு / திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்-தப்பட்டது | 2021 பாதீடு | 2020 | 2021 |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 5.4<br>0.14% | வி.கி. | |

குறிப்பு: 2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுக்காகவும் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களானது அரச நிறுவனங்களின் செலவினங்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளாது 'பெருந் தோட்டங்களுக்காக 2000 மில்லியன் ரூபாவினையும் நீர்ப்பாசனப் பணிகளுக்காக 1500 மில்லியன் ரூபாவினையும் குளங்கள் புனரமைப்பு செய்வதற்காக. 1000 மில்லியன் ரூபாவினையும் கூட்டுறவுடன் மீன்பிடித்தலுக்காக 500 மில்லியன் ரூபாவினையும் மீன் பண்ணை அபிவிருத்திக்காக 200 மில்லியன் ரூபாவினையும் நன்னீர் மீன்பிடிக்காக 150 மில்லியன் ரூபாவினையும் ஒதுக்கீடுகளாக உள்ளடக்கியுள்ளன.

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

**வரைபடம் 7.2**: கமத்தொழில், கடற்றொழில் செலவினம், ரூ.பில்லியனில், 2015 – 2019




**அட்டவணை 7.3**: கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம்/அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவினத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| **கமத்தொழில் மற்றும் கடற்றொழில் துறை** | **-3.9%** | **18.3%** |
| கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 3.6% | 9.6% |
| கமத்தொழில் திணைக்களம் | 2.3% | 19.8% |
| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் | -19.2% | 29.6% |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | -17.2% | 32.4% |
| கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 9.4% | 15.3% |

| திணைக்களம்/அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவி-னத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| நீர்ப்பாசனத் திணைக்களம் | -1.7% | 17.5% |
| ஏனைய அமைச்சரவை ஒதுக்கீடுகள் | -4.5% | 19.2% |

### பகுப்பாய்வு

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இத் துறைக்கான ஒதுக்கீடு 19.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இத் துறைக்கான செலவினமும் மொத்த உற்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகத் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. எவ்வாறாயினும் முழுவரவு செலவுத்திட்டத்தினதும் சதவீதமாகக் கணிப்பிடும் போது , செலவினமானது 2020 ஆம் ஆண்டில் 4.2% சதவீதத்தில் இருந்து 3.9% சதவீதமாகக் குறைவடைந்துள்ளது, மீண்டும் 2021 ஆம் ஆண்டில் 4.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கமத்தொழில் அமைச்சு மற்றும் நெல் மற்றும் தானிய வகைகள், இயற்கை உணவு, மரக்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்தி ஊக்குவிப்பு, விதை தயாரிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டமையே 2021 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு அதிகரித்தமைக்கான முக்கிய காரணம் ஆகும். கூடுதலாக நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடிப் பிரிவுகளுக்கான ஒதுக்கீடுகளும் 2021 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளன.

## அரசாங்க கொள்கைகளுக்கு அமைய வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு' என்ற உத்தியோகபூர்வ கொள்கை ஆவணத்தில் விவசாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பல கொள்கைகளுக்கு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. சில சந்தர்ப்பங்களில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்ட போதும் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் ஒதுக்கீட்டுத் தொகை குறைக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறைக்கான கொள்கை முன்னுரிமைகளும், வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் அட்டவணை 7.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.4**: 2021 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுடன் அரசாங்க விவசாயக் கொள்கைக் கட்டமைப்பை ஒப்பிடுதல

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **1** | **பொது விவசாயம்** | |
| 1.1 | விவசாயக் காப்புறுதித் திட்டம், ஓய்வூதியத் திட்டம், குறைந்த வட்டியிலான விவசாயக் கடன் திட்டம், பயிர் காப்புறுதித் திட்டம், மண்ணின் செழிப்புத் தன்மையை முகாமைத்து வப் படுத்தும் தொழில்நுட்ப முறை, விவசாய விளைச்சல் முகாமைத்துவ தொழில்நுட்ப முறை என்பன அறிமுகப்படுத்தப்படும். | **விவசாயிகள் ஓய்வூதியத் திட்ட த்திற்கு 4,000 மில்லியன் ரூபாவும் பயிர் காப்புறுதித் திட்டத்திற்கு 1,000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.** இது விவசாய அமைச்சின் வரவு செலவுத் திட்டத்தின் 21% ஆகும். எவ்வாறாயினும் **பயிர் காப்புறுதித் திட்டத்திற்கான செலவினம் காலப்போக்கில் குறை வடைந்துள்ளது.** 2019 ஆம் ஆண்டில் 1,988 மில்லிய ன் ரூபாவாகக் காணப்பட்ட இவ்வொதுக்கீடு 2020 ஆம் ஆண்டில் ரூ.1,514 மில்லியன் ரூபாவாகக் குறை வடைந்துள்ளது. |
| 1.2 | கடந்த காலங்களில் விவசாயிகள் முகங்கொடுத்த சேதங்களுக்காக வழங்கப்பட்ட நட்ட ஈடுகளை வழங்கி முடித்தல் | 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், இக் குறிப்பிட்ட திட்டங்கள் தொடர்பாக **எவ்விதமான தகவல்களையும் வழங்கவில்லை** |

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1.3 | பயன்படுத்தாத காணிகளை உச்ச பயனுள்ள காணிகளாக மாற்றுவதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்தல். | கைவிடப்பட்ட நெல் வயல்களில் மீண்டும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காக நெல் மற்றும் தானியங்கள் இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டில் 1,000 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது. இவ்வொதுக்கீடானது 2019 ஆம் ஆண்டில் 1,177 ஆம் ஆண்டில் 2020 ஆம் ஆண்டில் 1,343 மில்லியன் ரூபாவாகவும் இருந்துள்ளதோடு 2021 ஆம் ஆண்டில் இது குறைக்கப்பட்டுள்ளது |
| 1.4 | பசுமை இல்லம், ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் நீர்த் தாவரங்களையும் நீர் விலங்குகளான நண்டு இறால் போன்றவற்றையும் வளர்க்கும் யஙரயிழஙெை௨ள யபசஙை௨ரடவரசந முறையினையும் ஊக்குவிப்பதோடு இவ்வாறான விவசாய – வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிக்க இளம் விவசாயிகளுக்கு இறக்குமதி வரிச்சலுகை மற்றும் குறைந்த வட்டியிலான கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தல் | இளம் தொழில்முனைவோர் ஆக்கும் முயற்சியின் ஒருபகுதியாக விவசாயிகளுக்கு கடன்கள் மற்றும் மானியங்கள் வழங்குவதற்கு 2,500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>விவசாயத் துறையில் ஈடுபடவுள்ள 1,000 இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சி மற்றும் நிதியுதவி அளிப்பதற்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 1.5 | இளம் விவசாய தொழில்முனைவோரை ஊக்கப்படுத்துவதற்காக நவீன விவசாய – தொழில்நுட்ப அறிவு, விவசாய முறைகளில் அறிவு, விவசாய வருமானங்களை ஸ்திரப்படுத்தும் முறைகள், சந்தைப்படுத்தல் உத்திகள், இலகு கடன் வசதிகள் மற்றும் வரிச் சலுகைகளை நடைமுறைப்படுத்தல். | அரசாங்கம் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் விவசாய த்துறைக்கான ஒதுக்கீடுகளில் 12% சதவீதத்தை இம்முயற்சிகளுக்காக ஒதுக்கியுள்ளது. விவசாயத்தில் (கமத்தொழில், கடற்றொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்டவை) ஈடுபடும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அடுத்த 5 வருடங்களுக்கு வரி விலக்கு அளிப்பது குறித்தும் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் முன்மொழியப்பட்டுள்ளது. |
| 1.6 | செத்தல் மிளகாய், சோளம், சோயா, பச்சைப் பயறு, கௌப்பி, வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளித்தல் | பல்வேறு உள்ளூர் பயிர்களை வளர்ப்பதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள செயல்த் திட்டங்களுக்கு நெல் மற்றும் தானியங்கள் இராஜாங்க அமைச்சு **6,538 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.** இது இவ்வமைச்சின் மிக முக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகும். அத்துடன் இந்த ஒதுக்கீடு அமைச்சின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 35% சதவீதமாகும். |
| 1.7 | பிராந்திய ரீதியில் கூட்டுறவு விவசாய உற்பத்தி முறை அறிமுகப்படுத்தப்பட்டு தொழில்நுட்ப உதவி, உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வசதிகளும் வழங்கப்படும். | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர் பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| 1.8 | சுவ திவிமக திட்டம்:<br>- விவசாய – இரசாயனங்கள் மற்றும் சேர்க்கைகள் இல்லாத ஆரோக்கியமான உணவை ஊக்குவித்தல்<br>- சேதன உணவு உற்பத்தியை ஊக்குவித்தல்<br>- அனைத்து வயதினருக்கும் சரியான உணவுப் பழக்கத்தை ஊக்குவித்தல் | சேதன உணவு உற்பத்தி தொடர்பான திட்டத்திற்காக கமத்தொழில் அமைச்சுக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் சேதன உணவு உற்பத்திக்காக நெல் மற்றும் தானிய வகைகள் இராஜாங்க அமைச்சுக்கு 70 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 1.9 | விவசாய ஆராய்ச்சி அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கு 'விவசாயக் கல்லூரி' ஒன்றினை நடைமுறைப்படுத்தல் | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **2** | **பால் மற்றும் இறைச்சி** | |
| 2.1 | வட மாகாணத்தில், நுகர்வோரால் பயன்படுத்தப்படும் உணவுப் பொருட்களான பால், முட்டை, விலங்கு மற்றும் மீன் உற்பத்திகள், காய்கறிகள் பழங்க ளின் உற்பத்தியை ஊக்குவித்தல்.<br><br>வட மாகாணத்தில் பால் உற்பத்தியை ஊக்குவித்தலும் பாலைக் கறந்தெடுக்கும் உபகரணங்களை பால் உற்பத்தியாளர்களுக்கும் விவசாய கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சலுகைக் கட்டணம் மற்றும் இலகு கொடுப்பனவு முறையில் வழங்குதலும் | பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1,667 மில்லியன் ரூபாவினை (வரவு செலவுத் திட்டத்தின் 59%) கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சு ஒதுக்கியுள்ளது.<br><br>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக 450 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்து புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்துடன் மிகப்பெரிய முயற்சி தொடர்புடையது.<br><br>எவ்வாறாயினும் வட மாகாணத்தில் இத் திட்டங்களை மேற்கொள்வது குறித்து 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| 2.3 | தரமான கால்நடைத் தீவனங்களுக்கான கட்டணங்களைக் குறைத்தல் | **எவ்விதமான கட்டணக் குறைப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லை** |
| 2.4 | பால் குளிரூட்டும் வசதிகளை அதிகரிப்பதற்கு சூரிய சக்தியில் இயங்கும் சிறு அளவிலான குளிரூட்டி வசதிகளை அறிமுகப்படுத்துதல். | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.** |
| 2.5 | குறைந்தளவு இடப் பரப்பிற்குள் கூடுதலான மாடுகளை வளர்ப்பதற்கான 'பட்டி முறை' அறிமுகப்படுத்தப்படுத்தலும், நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடை பண்ணைகளை உருவாக்க நிலம் மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதலும் | **எவ்விதமான ஒதுக்கீடும் செய்யப்படவில்லை.** |
| 2.6 | இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதி:<br><br>- கோழி, முட்டை உற்பத்தியை அதிகரித்தல், சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதோடு பாரிய அளவிலான உற்பத்தியாளர்களை ஏற்றுமதியில் ஈடுபடத்தக்கதாக ஊக்குவித்தல். செயற்கையான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் ஹார்மோன்கள் முதலியற்றை வழங்காமல் இயற்கையான முறையில் விலங்குகளை வளர்த்து இறைச்சி உற்பத்தியை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.<br><br>விலங்குப் பண்ணைகளுக்கும், உற்பத்தி நிலையங்களுக்கும் சர்வதேச தரங்களையும், நற்பயன் அளிக்கக் கூடிய கண்காணிப்பு முறைகளையும் அறிமுகப்படுத்துதல். | கால்நடை தயாரிப்புக்களை மேம்படுத்துவது தொடர்பான திட்டங்களுக்காக கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சினால் 129 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சின் இப் பாரிய ஒதுக்கீடானது, உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ள இத் தொகை அமைச்சின் வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 5% ஆகும். |

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2.7 | நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கான முறைகைளை அறிமுகப்படுத்துதல் – உதாரணம் : பிளாஸ்டிக் குழாய்களின் அமைப்பிலிருந்து மிகக் குறைந்த விகிதத்தில் மண்ணில் தண்ணீரைச் சொட்டும், சொட்டு நீர்ப்பாசனம், மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறை. | பிளாஸ்டிக் குழாய்களின் அமைப்பிலிருந்து மிகக் குறைந்த விகிதத்தில் மண்ணில் தண்ணீரைச் சொட்டும், சொட்டு நீர்ப்பாசன முறைமைக்காகவும் நீரைப் பாதுகாப்பதற்காகவும்1,500 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுடன் கூடிய செயல்த் திட்டமொன்று 2021 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையில் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| **3** | **கடற்றொழில்** | |
| 3.1 | மீன் பிடிப் படகுகள்<br>- நவீன தொழில்நுட்பம் மற்றும் செயற்பாட்டு வசதிகளைக் கொண்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளைக் கொள்வனவு செய்தல், கடல் நீரைப் பயன்படுத்தி குளிரூட்டும் வசதிகளை உருவாக்குவதுடன் அதற்கு சூரிய சக்தியைப் பயன்படுத்துவது ஊக்கவிக்கப்படும்.<br>- திருகோணமலையில் பாரியளவான ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளை தயாரிப்பதற்கும், பராமரிப்பதற்கும் வசதிகளை உருவாக்குதல். | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| 3.2 | மீன்பிடியுடன் தொடர்புடைய வீட்டுத் தொழிலில் பெண்களை ஈடுபடுத்துவதற்கான திட்டத்தை உருவாக்குதல். | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| 3.3 | ஆழ்கடல் மற்றும் பல நாட்கள் கடலில் தங்கியிருந்து மீன்பிடிப்பதற்காக ஒலுவில் உட்பட ஏற்கனவே உள்ள மீன்பிடித் துறைமுகங்கள் நவீனமயப்படுத்தலும் தேவைப்படின் புதிய துறைமுகங்ககளை நிர்மானித்தலும் | மீன்பிடித் துறைமுகங்கள், நங்கூரமிடும் இடங்களின் பராமரிப்பு, மேம்பாடு மற்றும் புதிய நிர்மாணங்களுக்காக கடற்றொழில் அமைச்சு 2,650 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. கந்தர மீன்பிடித் துறைமுகத்திற்கு பாரிய தொகையான 1,590 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 640 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட ஒதுக்கீடானது 2021 ஆம் ஆண்டில் 927 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| 3.4 | மீனவ துறைமுகங்கள், மீன்கள் எடுத்துவரும் இடங்கள் மற்றும் இறங்கு துறைகள் அனைத்தும் நவீன தொழில்நுட்ப வசதிகள், குளிரூட்டி வசதிகள், எரிபொருள் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகள் அடங்கிய நிலையமாக மாற்றப்படும். | மீன்பிடித் துறைமுகங்களை நவீனமயப்படுத்த கடற்றொழில் அமைச்சு 545 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. |
| 3.5 | சர்வதேச கடல் பிரதேசத்தில் உள்ளூர் கம்பனிகள் மீன்பிடிப்பதை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்தல் | இந் நோக்கத்துடன் தொடர்புடைய இரண்டு திட்டங்களுக்கு கடற்றொழில் அமைச்சு 56 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது (சர்வதேச மாநாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பு, செயற்கைக் கோள் தொழில்நுட்பத்தை வழங்குதல்) |
| 3.6 | நிதி உதவி<br>- உள்ளக மற்றும் உள்நாட்டு மீன்வளர்ப்பையும் அனைத்து வகையான நீர் சூழல்களிலும் மீன், மட்டி, மற்றும் பிற உயிரினங்களின் இனப்பெருக்கம், வளர்ப்பு மற்றும் அறுவடையை மேற்கொள்வதற்கும் குறைந்த வட்டிக் கடன்கள், வரி சலுகைகள்இ காப்பீடு, ஆலோசனை மற்றும் சந்தை ஒருங்கிணைப்பு உதவி ஆகியவற்றை வழங்குதல். மதிப்புச் சங்கிலியில் மீனின் தரத்தை மேம்படுத்தும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு வட்டியில-ˈலாக் கடன் திட்டம் | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 3.7 | பெருந்தோட்டங்கள்:<br>- பயன்படுத்தப்படாத பெருந்தோட்டக் காணிகளை தோட்டக்கலை மற்றும் சேதன உற்பத்திக்குப் பயன்படுத்துதல்.<br>- மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிந்து தோட்டத் துறையை உள்ளடக்கும் வகையில் புதிய கைத்தொழில் வலயத்தை உருவாக்குதல் | இத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| 3.8 | அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களில் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக மீள் பயிர்ச்செய்கை மற்றும் உர பயன்பாட்டுக்குத் தேவையான மூலதனத்தை விநியோகிப்பதுடன் பொருத்தமான முகாமைத்துவ முறையொன்று அறிமுகப்படுத்தப்படும். | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |

# 8. சமூகப் பாதுகாப்புத் துறை

சமூகப் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடுகளில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு[7], சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு மற்றும் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியன உள்ளடங்கியுள்ளன.

## 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் சமூர்திக்கான நிதி ஒதுக்கீடு-களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியானது 2021 ஆம் ஆண்டில் சமூக வலுவூட்டல் துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டில் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு வழிவகுப்பதாக உள்ளது[8]

**அட்டவணை 8.1**: சமூகப் பாதுகாப்புத் துறை செலவினச் சுருக்கம்

**பெறுமதிகள் பில்லி யன் ரூபாவில்**

| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020 | 2021 |
| **சமூகப் பாதுகாப்புத் துறை** | **357.5** | **408.6** | **393.8** | **-1.12%** | |
| *அரச செலவினத்தின் பங்கு* | *12.1%* | *11.5%* | *10.4%* | | |
| *மொ.உ.உ இன் பங்கு* | *2.38%* | *2.56%* | *2.24%* | | |
| மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சு | 0.4<br>0.0% | 8.0<br>0.2% | 8.3<br>0.2% | **0.00%** | |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | 0.4<br>0.0% | 0.4<br>0.0% | 0.4<br>0.0% | **0.00%** | |
| சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வணிக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | 58.7<br>2.0% | 113.8<br>3.2% | 84.7<br>2.2% | **-0.97%** | |

7 இந்த அமைச்சின் செலவினம் சமூகப் பாதுகாப்புடன் தொடர்புடைய செலவினங்களை மாத்திரம் உள்ளடக்கும் வகையில் சரிசெய்யப்பட்டுள்ளது.

8 2019 இல் இந்தத் துறை முதன்மை தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் கீழ் உள்ளடக்கப்பட்ட பொருத்தமான செலவினங்களையும் உள்ளடக்கியிருந்தது.


| அமைச்சு/இராஜாங்க அமைச்சு/திணைக்களம் | அரச செலவினம் / ஒதுக்கீடு | | | Y-o-Y மாற்றம் |
|---|---|---|---|---|
| | 2019 உண்மை | 2020 திருத்தப்பட்டது | 2021 பாதீடு | 2020 2021 |
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 58.7<br>2.0% | 106.4<br>3.0% | 71.6<br>1.9% | -1.11% |
| அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு* | 273.0<br>9.2% | 286.9<br>8.1% | 289.8<br>7.6% | -0.43% |
| ஓய்வூதியத் திணைக்களம் | 273.0<br>9.2% | 286.9<br>8.1% | 289.8<br>7.6% | -0.43% |
| ஏனையவை** | 25.5<br>0.9% | வி.கி. | வி.கி. | வி.கி. |
| 2021 வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட மேலதிகத் திட்டங்கள் | வி.கி. | வி.கி. | 11.0<br>0.29% | வி.கி. |

2019 ஆம் ஆண்டின் நடைமுறைச் செலவினங்களுக்காகவும் 2020 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட உத்தேசப் பெறுமதிகளுக்காகவும் நடைமுறைப்படுத்-தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களானது அரச நிறுவனங்களின் செலவினங்களில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டமானது சமுர்த்தி குடும்பங்களின் முன்னேற்றத்திற்காக 10,000 மில்லியன் ரூபாவினையும் தொழில் முயற்சிகளில் ஈடுபடும் இளம் பெண்களுக்காக 1,000 மில்லியன்ரூபாவினையும் ஒதுக்கீடுகளாக உள்ளடக்கியுள்ளன.

*மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு வரைபு (2021) மற்றும் வரவு செலவுத் திட்ட உரை (2021).).*

*வி.கி. - விபரம் கிடைக்கவில்லை*

**வரைபடம் 8.2:** சமூகப் பாதுகாப்புத் துறை செலவினம், ரூ. பில்லியனில், 2015 – 2019



**அட்டவணை 8.3:** கடந்த கால அனுபவங்கள், 2015 – 2019

| திணைக்களம் / அமைச்சு | சராசரி வளர்ச்சி (உண்மையான செலவினத்தில்) | சராசரிப் பற்றாக்குறை (மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான செலவினம்) |
|---|---|---|
| **சமூகப் பாதுகாப்புத் துறை** | **7.9%** | **-0.7%** |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் | 4.2% | 2.9% |
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் | 3.0% | 4.1% |
| ஓய்வூதியத் திணைக்களம் | 11.1% | -3.1% |
| ஏனையவை | -2.7% | 6.5% |

## பகுப்பாய்வு

சமூகப் பாதுகாப்புத் துறையானது, ஓய்வூதியங்களையும் சமுர்த்திப் பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி இருப்பதனால் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் பெரும்பகுதியைக் கொண்டுள்ளது. ஆகவே மீண்டுவரும் செலவினத்தில் ஏறத்தாழ முழுத் தொகையினையும் இத் துறைக்கான செலவினம் கொண்டுள்ளது. இது அரசாங்கத் செலவினத்தின் 10.4% சதவீதத்திற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.2% சதவீதத்திற்கும் சமமானதாகும்.

2019 ஆம் ஆண்டில் 358 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட சமூகப் பாதுகாப்புக்கான செலவினம் 2020 ஆம் ஆண்டில் 408.6 பில்லியன் ரூபாவாகக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. கோவிட் – 19 நிவாரணத் திட்டங்களுக்காக 38,500 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டமையே இவ்வதிகரிப்பிற்கான முக்கிய காரணமாகும். 2021 ஆம் ஆண்டிற்கான செலவினம் 394 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் கோவிட் – 19 நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித் தொகையினை, 2021 ஆம் ஆண்டில் உள்ளடக்கப்படாமையே இதற்கான காரணமாகும்.

## அரசாங்க கொள்கையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட எதிர்பார்ப்புக்கள்

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 1 | "கமி லியத ரட்டே சவிய"<br>- சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிலும், மதிப்புக் கூட்டப்பட்ட உற்பத்தியிலும் பெண்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபடத் தக்க வகையில் செயல்த் திட்டங்களை வகுத்தல்.<br>- அதிக வட்டி வீதங்களை வசூலிக்கும் ஒழுங்கு படுத்தப்படாத நுண்நிதிய திட்டங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல். | பெண்கள் அபிவிருத்தி தொடர்பான முயற்சிகளுக்காக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மொத்த ஒதுக்கீடு 129 மில்லியன் ரூபாவாகும் (இதுஅமைச்சின் வரவு செலவுத் திட்டத்தில் வெறுமனே 0.42% சதவீதம் மாத்திரம்). இந்த ஒதுக்கீட்டில் பெண்கள் மத்தியில் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோரின் அபிவிருத்திக்காக 90 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையின் போது சமுர்தி பயனாளர்களான பெண்கள் கடைகளை நிறுவுவதற்கு பங்களிப்புச் செய்யும் உள்ளூர் தொழில்முயற்சியாளர்களுக்கு வரி விலக்குகளை வழங்கும் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறான கடைகளுக்கு கடன் வசதிகள் மற்றும் காப்புறுதிகளை வழங்க அரசாங்கம் மேலதிகமாக 1,000 மில்லிய ன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.<br><br>எவ்வாறாயினும் **ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதிய திட்டங்களினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம்** வழங்குவதற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எவ்விதமான **ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.** |

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| 2 | தமிழர்களதும் முஸ்லிம்களதும் சகோதரத்துவம் புனர்ஜீவன நிதியத்தை ஆரம்பித்தல் | இத் திட்டத்திற்கான ஒதுக்கீடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் எவ்விதமான தகவல்களும் வழங்கப்படவில்லை |
| 3 | மாற்றுத் திறனாளிகள்<br>- மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட திறன்/ தொழிற் பயிற்சித் திட்டங்களை வழங்குதல்.<br>- மாற்றுத் திறனாளிகளுக்கு உதவுவதற்கான வாடிக்கையாளர் சேவை நிலையங்களை உருவாக்குதல் | மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களுக்காக சமுர்த்தி இராஜாங்க அமைச்சு 4,730 மில்லியன் ரூபாவினை (அமைச்சின் வரவு செலவுத் திட்டத்தில் 5%) ஒதுக்கீடு செய்துள்ளது. எவ்வாறானும், இதொரு மீண்டுவரும் செலவினம். இத் திட்டங்களுக்காக புதிதாக எவ்விதமான ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை. |
| 4 | முதியோர் பராமரிப்பு<br>- முதுமைக் காலத்தில் சவால்களை வெற்றி கொள்வதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.<br>- முதியோர் உதவித் திட்டத்தில் இருந்து கழிக்கப்படும் 100 ரூபாவினை ஏற்கனவே உள்ள 2,000 ரூபாவுடன் சேர்த்து மாதாந்த கொடுப்பனவை 2,500 ரூபாவாக அதிகரித்தல்.<br>- பரிந்துரைக்கப்பட்ட மாத்திரைகளை வாங்குவதற்கும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இலவச மருத்துவப் பரிசோதனை செய்வதற்கும் சிரேஷ்ட பிரஜைகளுக்கு மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல். | - உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் இத் திட்டங்கள் தொடர்பாக எவ்விதமான குறிப் பும் வழங்கப்படவில்லை.<br>- முதியோர்களுக்கு வழங்கப்படும் சமூகப் பாதுகாப்பின் முக்கிய வடிவம் ஓய்வூதியக் கொடுப்பனவுகள். 2021 ஆம் ஆண்டில் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு சுமார் 250 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. |
| | சமூகப் பாதுகாப்பும் நலனும்.<br>- திவிநெகும திட்டத்தை மீண்டும் ஆரம்பி த்து புத்துயிர் பெறச் செய்தல் தற்போது ஓய்வூதியம் பெறாதவர்களுக்கு புதிய பங்களிப்புச் செய்யக்கூடிய ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்குதல்<br>- ஆபத்தான நோய்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்<br>- எவ்வித வாழ்வாதாரமும் அற்ற 12 வயதிற்கு குறைந்த பிள்ளைகளைக் கொண்ட பெற்றோரில் ஒருவர் மாத்திரம் வாழ்கின்ற குடும்பத்திற்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். | - 2021 வரவு செலவுத் திட்டம் திவிநெகும திட்டம் தொடர்பில் எதனையும் குறிப்பிடவில்லை.<br>- இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் மீண்டுவரும் செலவினம் 11மூ சதவீதத்தினால் அதாவது 125.5 மில்லியன் ரூபாவில் இருந்து 140 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.<br>- சிறுநீரக நோயாளிகளுக்கான நிதி உதவி 2021 ஆம் ஆண்டில் 32% சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது (1,785 மில்லியன் ரூபாவில் இருந்து 2,349 மில்லியன் ரூபாவாக).<br>- கிராம சக்தி திட்டம் மற்றும் பெற்றோரில் ஒருவரை மாத்திரம் கொண்ட குடும்பங்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (இரண்டுக்கும் சேர்த்து 338 மில்லியன்) தற்போது 'சுந்தர கம' கிராமிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் என மாற்றப்பட்டுள்ளது (2021 ஆம் ஆண்டில் 5,300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது). |

| | அரச கொள்கை முன்னுரிமைப்படுத்தல்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | சமுர்த்தி பயனாளர்கள்<br>- சமுர்த்தி குடும்பங்களிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி/ வேலைத் திட்டங்களை வழங்குதல்.<br>- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அனைத்து சமுர்த்தி சலுகைகளும் உயர்த்தப்படும் | - 2021 ஆம் ஆண்டில் சமுர்த்தி நிவாரண செலவினங்கள் 53,000 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சமுர்த்தி அமைச்சின் முக்கிய செலவின ஒதுக்கீடு (மொத்த செலவினத்தில் 63%). இது 2020 ஆம் ஆண்டின் சமுர்தி நிவாரண ஒதுக்கீட்டுக்கு (ரூ.52,688 மில்லியன்) இணையாக உள்ளதுடன் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 19% சதவீத அதிகரிப்பாகும்.<br>- 2020 ஆம் ஆண்டில் சமுர்தி அபிவிருத்தித் திணைக்களமும் கோவிட் நிவாரணத்திற்காக 38,500 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தியுள்ளது.<br>- சமுர்த்தி பயனாளிகளின் முன்னேற்றத் திட்டத்திற்காக 600 மில்லியன் மூலதனச் செலவினம்<br>- ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான செலவினம் 2021 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்படுவதற்கு முன்னர் 2020 ஆம் ஆண்டில் 505 மில்லிய ன் ரூபாவில் இருந்து 195 மில்லியன் ரூபாவாக கணிசமாகக் குறைக்கப்பட்டது.<br>- சமுர்த்தி குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக 10,000 மில்லியன் ரூபா மேலதிகமாக 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையில் ஒதுக்கப்பட்டுள்ளது. |
| | சமுர்த்தி நிர்வாகம்<br>- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து சமுர்த்தி நிர்வாகத்தையும் மறுசீரமைத்தல்<br>- சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊழியர்களின் சம்பளங்கள், மேலதிகக் கொடுப்பனவுகள், பதவி உயர்வுகள் மற்றும் ஓய்வூதியங்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல் | - நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சமுர்த்தியை மறுசீரமைப்பது தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பீடுகள் குறிப்பாக எவ்விதமான தகவலையும் வழங்கவில்லை. எனினும் மூலதனச் சொத்துகள் கொள்வனவு மற்றும் மேம்பாட்டுக்கான செலவினம் வெறும் 7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.<br>- ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிக்கும் சமுர்த்தி வாழ்நாள் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் திட்டம் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது அத்துடன் சமுர்த்தி சலுகைகள் இக் கணக் கில் வரவு வைக்கப்படுவதுடன் அரச பிணையங்களில் மீள்முதலீடு செய்யப்படும்.<br>- சமுர்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் தனிப்பட்ட ஊதியங்கள் 2021 ஆம் ஆண்டில் 19% சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது (ரூ.14,278 மில்லியனில் இருந்து ரூ.17,019 மில்லியன்). 2020 ஆம் ஆண்டின் 11% சதவீத அதிகரிப்பை விட இது அதிகமானதாகும். |

# பிரிவு III: தகவல் தரநிலைகள் மற்றும் ஏதுநிலை சிரத்தை

வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய தகவல்களை வழங்குவதில் பின்பற்றப்படும் தரநிலைகள் தொடர்பாக அறிக்கையின் இப் பிரிவு அக்கறையை வெளிப்படுத்துகிறது. கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் பல்வேறு கரிசனைகளை முன்னிலைப்படுத்தி அரசாங்க நிதி பற்றிய குழு (COPF) ஒவ்வொரு ஆண்டும் பல அறிக்கைகளைத் தயாரித்திருந்தது. அவற்றில் சில தொடர்ந்து வந்த வரவு செலவுத் திட்டங்களில் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஆனால் பெரும்பான்மையானவை இதுவரை கவனத்தில் கொள்ளப்படவில்லை.

**தகவல் தரநிலைகளும் தக்க சான்றாதாரங்களும் என்பது** ஒதுக்கீடுகள் மற்றும் ஒதுக்கீடுகளில் மாற்றங்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதுடன், வழங்கப்படும் தரவுகளின் போதுமான தன்மை மற்றும் இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்ட கரிசனைகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வழங்கப்பட்ட தரவின் உள்நிலைத்தன்மை மற்றும்.·.அல்லது தொழில்முறை மற்றும் துல்லியம் தொடர்பிலான தீவிர கரிசனையைக் குறிக்கிறது.

இப் பிரிவு இரண்டு பகுதிகளாக உள்ளன (1) அரசாங்க நிதி பற்றிய குழுவினால் முன்னிலைப்படுத்தப்பட்ட இதற்கு முன்னரான வரவு செலவுத் திட்டக் கரிசனைகள் குறித்த மீளாய்வு (2) சக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தின் பலவீனம்.

# 1. தகவல் கரிசனைகள்

## 1.1 வரவு செலவுத் திட்டத்தில் பொருத்தமான துறை ரீதியான வகைப்படுத்தல் இல்லாமை

வரவு செலவுத் திட்ட செலவினங்களுக்கு செயல்பாடு.்துறை ரீதியான வகைப்படுத்தல்கள் வழங்கப்படவில்லை என்பது 2018 வரவு செலவுத் திட்டம் தொடர்பான அரச நிதி பற்றிய குழுவின் (COPF) அறிக்கையில் முதன் முதலாக முன்னிலைப்படுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2019 வரவு செலவுத் திட்டத்தில் துறை ரீதியான வகைப்படுத்தலை நிதியமைச்சு வழங்கியது. எனினும் 2020 மற்றும் 2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதியமைச்சின் இந்த சிறப்பான நடவடிக்கை நீக்கப்பட்டிருந்தது.

## 1.2 வரவு செலவுத் திட்டத்தில் முக்கிய மாற்றங்களுக்கான விளக்கங்கள் இல்லாமை

வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள முக்கிய மாற்றங்கள் குறித்து நிதியமைச்சு குறிப்பிட வேண்டும் என 2018 வரவு செலவுத் திட்டம் தொடர்பான COPF அறிக்கை பரிந்துரைத்திருந்தது. நடப்பு ஆண்டிலிருந்து மதிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீடு 20 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்ந்திருந்தால் அல்லது 10 சதவீதத்திற்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்திருந்தால் அது 'முக்கிய மாற்றங்கள்' என வரையறுக்கப்படுகின்றது. இது செலவினத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தொடர்பாக தெளிவான பார்வையை வழங்கும். எ வ்வாறாயினும் 2021 வரவு செலவுத் திட்டத்தில் சில விடயங்களுக்கு மாத்திரமே விளக்கம் அளிக்கப்பட்டிருந்ததுடன், முக்கிய மாற்றங்களைக் கொண்ட பல விடயங்களுக்கு விளக்கமே வழங்கப்படவில்லை. அமைச்சின் துறைகளில் ஏற்படும் மாற்றங்களுடன் செலவினங்களுக்கான மாற்றங்களை அடையாளம் காணும் பணி இன்னும் அதிக சவாலானதாக இருக்கின்றது.

# 2. ஏனைய கரிசனைகள்

## 2.1 சீனி வரி

2019 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றி, பொது நிதி தொடர்பான பாராளுமன்ற குழு (COPF) அறிக்கையானது இனிப்புப் பானங்கள் மீதான சர்க்கரை வரியை ஒரு கிராமுக்கு 50 சதத்திலிருந்து ஒரு கிராமுக்கு 40 சதமாகக் குறைப்பது தொடர்பான தனது அக்கறைகளை வெளிப்படுத்தியது. மேலும், காபனேற்றப்பட்ட 100 மில்லி லீற்றர் பானத்திற்கு 4 கிராமுக்கும் குறைவான சீனியை உள்ளடக்குவதற்கும், 100 மில்லி லீற்றர் பழப் பானத்திற்கு 8 கிராம் சீனியை உள்ளடக்குவதற்கும் வரிவிலக்களிக்கப்பட உள்ளதாக 2019 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டது. எவ்வாறாயினும் காபனேற்றப்பட்ட 100 மில்லி லீற்றர் பானத்திற்கு 2 கிராமுக்கு மாத்திரமே விலக்களிக்க வேண்டும் என சுகாதார அமைச்சு பரிந்துரைத்திருந்தது. இக் கொள்கையானது நேர்மறையான சமூக தாக்கத்தையும் நிதித் தாக்கத்தையும் கொண்டிருப்பதனால், சுகாதார அமைச்சின் பரிந்துரைப்படி விலக்கு அளவை நிர்ணயிக்கவும், ஒரு கிராமுக்கு 50 சத வரியை வைத்திருக்கவும் பொது நிதி தொடர்பான பாராளுமன்ற குழு (COPF) அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பொது நிதி தொடர்பான பாராளுமன்ற குழு (COPF) எழுப்பிய கவலைகளை கருத்தில் கொள்ளாது 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரி விகிதங்கள் 2019 ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல.2197/9 இனால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி, அரசாங்கம் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2197/3 இனூடாக சீனி வரியை ஒரு கிராமுக்கு 40 சதத்தில் இருந்து 30 சதமாகக் குறைத்தது. காபனேற்றப்பட்ட பானங்களுக்கான விலக்கு 100 மில்லி லீற்றருக்கு 4 கிராமில் இருந்து 100 மில்லி லீற்றருக்கு 6 கிராமாக உயர்த்தப்பட்டது.

## 2.2 பந்தய மற்றும் சூதாட்ட வசூலிப்புக்கள்

100 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட கசினோ நுழைவுக் கட்டணம் 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 50 அமெரிக்க டொலர்களாகக் குறைக்கப்பட்டது. அத்துடன் கசினோக்களுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் 200 மில்லியன் ரூபாவில் இருந்து 400 மில்லியன் ரூபாகவாக அதிகரிக்கப்பட்டது. அதேவேளை ருஜினோ விளையாட்டுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் 200 மில்லியன்

ரூபாவில் இருந்து 1 மில்லியன் ரூபாகவாகக் குறைக்கப்பட்டது. வரிக் குறைப்பு தொடர்பில் பொது நிதி தொடர்பான பாராளுமன்ற குழு (COPF) தனது அக்கறைகளை வெளியிட்டுள்ள அதேவேளை இவ் வரிக் குறைப்புக்கள் திருத்தப்பட்டுள்ளதாக தவறான கூற்றொன்றையும் வெளியிடுகின்றது. எவ்வாறாயினும் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிகின்றது. வரி தொடர்பான மாற்றங்கள் குறித்து அறிவிப்பதற்கு எந்த ஒரு வர்த்தமானியோ அல்லது உத்தியோகபூர்வ ஆவணங்களோ வெளியிடப்படவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத் தளமானது, இவ்வரி தொடர்பாக 2015 ஆம் ஆண்டின் தகவல்களையே தற்போது வரை வழங்குகின்றது..

### 2.3 சிகரட் வரி தொடர்பான விலைக் குறியீடு

“சிகரட்டுகளுக்கான சுங்க வரி இப்போது வருடாந்த பணவீக்கத்தையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியையும் உள்ளடக்கும் வகையிலான குறைந்தபட்ச வருடாந்தத் தீர்வை அதிகரிப்புடன் கூடிய விலைக் குறியீட்டினை அடிப்படையகக் கொண்டிருக்கும்” என 2019 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய வரவு செலவுத் திட்டமானது 2020 ஆம் ஆண்டினதும் 2021 ஆம் ஆண்டினதும் பணவீக்கத்தையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எதிர்பார்ப்புக்களையும் அடிப்படையாகக் கொண்ட சிகரெட் மீதான வரிவிதிப்பில் எவ்விதமான மாற்றத்தையும் செய்யவில்லை. உண்மையில், 2021 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டமானது சிகரெட் அல்லது மதுபானங்கள் மீதான தீர்வைகளை அதிகரிக்கவில்லை. மாறாக சிகரெட் மற்றும் மதுபானம் உள்ளிட்ட பொருட்களுக்கான பொருட்கள் மற்றும் சேவை வரிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரியானது எந்த விகிதத்தில் விதிக்கப்படும் எனக் குறிப்பிடப்படவில்லை. எனவே புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் வரியை விதிப்பதன் விளைவாக தற்போதுள்ள வரி வீதமானது அதிகரிக்குமா குறைவடையுமா எனத் தெரியவில்லை. இவ்வறிக்கை வெளியிடப்படும் வரையில் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி விதிப்பானது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

# 3. சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் பலவீனங்கள்

வ்ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்ட நடைமுறையைப் வரவு செலவுத் திட்டத்தின் வெளிப்படைத்தன்மை, வரவு செலவுத் திட்ட மேற்பார்வை மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு. என்னும் மூன்று நிலைகளில் ஆராயும் சர்வதேச ஆய்வே திறந்த வரவு செலவுத் திட்ட கருத்தாய்வு (ழுடீளு) எனப்படும். 117 நாடுகளை உள்ளடக்கியயதாக 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கருத்தாய்வானது சமீபத்தில் வெளியிடப்பட்ட திறந்த வரவு செலவுத் திட்ட கருத்தாய்வாக விளங்குகின்றது..


திறந்த வரவு செலவுத் திட்ட சுட்டெண் (ழுடீஐ) என்பது திறந்த வரவு செலவுத் திட்ட கருத்தாய்வின் முக்கிய அம்சமாக விளங்குகின்றது. இது ஒவ்வொரு நாட்டின் வரவு செலவுத் திட்டத்தினதும் வெளிப்படைத்தன்மையின் அளவைக் குறித்து நிற்கின்றது. 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் திறந்த வரவு செலவுத் திட்ட சுட்டெண் (OBI) நூற்றுக்கு 41 புள்ளிகளைப் பெற்றிருந்தது. போதியளவு தகவல்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும், ஆகக் குறைந்தபட்ச புள்ளிகளான 61 புள்ளிகளிலும் பார்க்கக் குறைவாக இருந்தது. கருத்தாய்வின் கடந்த மூன்று சுற்றுக்களில் இலங்கையின், திறந்த வரவு செலவுத் திட்ட சுட்டெண் (OBI) அதிகரித்துள்ளதோடு மிகவும் மந்தமான முன்னேற்றத்தைக் காணக் கூடியதாக உள்ளது.

2019 ஆம் ஆண்டில் திறந்த வரவு செலவுத் திட்ட கருத்தாய்வில் (OBS) கண்காணிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய 8 ஆவணங்களில் 6 ஆவணங்களை இலங்கை வெளியிட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த ஆவணங்களில் தகவல்களை ஒழுங்கான முறையில் வழங்கத் தவறியதன் விளைவாக திறந்த வரவு செலவுத் திட்ட சுட்டெண் (OBI) மிகவும் குறைவடைந்துள்ளது . குறிப்பாக குடிமக்கள் வரவு செலவுத் திட்டத்தில் காலாண்டு அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கையின் விரிவான தன்மைக்கு குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் உத்தேச பெறுமதிகளுக்கு இணங்க நடுத்தரமான 60 புள்ளிகளைப் பெற்றுள்ளதோடு இது குறைந்தபட்ச புள்ளிகளான 61 இலும் பார்க்க சற்று குறைவாகக் காணப்படுகின்றது..

இவ்வறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனைப் போன்று உத்தேச வரவு செலவுத் திட்டங்களில் தகவல்களை வெளிப்படுத்தும் தன்மையினை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் உத்தேச வரவு செலவுத் திட்டங்களில் பின்வரும் தகவல்களைக் காண முடியாமல் உள்ளமையை 2019 ஆம் ஆண்டின் திறந்த வரவு செலவுத் திட்ட கருத்தாய்வு (OBS) சுட்டிக் காட்டுகின்றது.


1. செலவினங்களின் நடைமுறை சார்ந்த வகைப்பாடு.
2. ஆண்டிறுதியில் நிலுவையில் உள்ள கடனின் மொத்த உட்பாட்டு அமைப்பு (வட்டி விகிதங்கள்இ கடன் முதிர்ச்சி விவரம்இ இது உள்நாட்டுக் கடனா வெளியில் இருந்து பெறப்பட்ட கடனா ).
3. வரவு செலவுத் திட்டத்தின் நுண்நிதியப் பொருளாதார அனுமானங்களின் கூர் உணர்திறப் பகுப்பாய்வு.
4. மேலதிகமாக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான தகவல்கள்
5. மத்திய அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த நிதி (வரவு செலவுத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டத்திற்கு மேலதிகமாக).
6. வெவ்வேறு சனத்தொகை குழுக்களுக்கு நிதி தாக்கத்தை விளக்குவதற்கு செலவினங்களின் மாற்றைக் குறிப்பிடுதல் (பால்நிலை, வயது, வருமானம், பிராந்தியம் போன்றவை).
7. அரசாங்கத்தின் நிதிச் சொத்துக்களும் நிதி அல்லாச் சொத்துக்களும்
8. வரவு செலவுத் திட்ட ஆண்டுக்கான செலவின நிலுவைகள்.
9. அரசாங்கத்தின் எதிர்காலக் கடன்பொறுப்புக்க ளையும் நீண்ட காலத்தி ல் அதன் நிதி நிலைத்தன்மை.யையும் மதிப்பிடுதல்.
10. ஒதுக்கிடப்பட்ட வருமானத்தின் மதிப்பீடு.

**விடய ஆய்வு:** உக்ரேன் மற்றும் இலங்கையின் OBI புள்ளிகள்



2010 ஆம் ஆண்டின் திறந்த வரவு செலவுத் திட்ட கருத்தாய் வில் (OBS) இலங்கையும், உக்ரேனும் குறைந்த பட்ச புள்ளியான 61 புள்ளிகளை விட அதிகமான புள்ளிகளைப் பெற முடிந்தது. எனினும் அடுத்தடுத்த ஆண்டுகளில் உலகளாவிய தகவல் தரநிலைகள் தொடர்ச்சியாக முன்னேறி வரும் நிலையில் இரண்டு நாடுகளும் சக நாடுகளை விடப் பின்னடைவைச் சந்தித்தன.

2019 இல் இலங்கை வரவு செலவுத் திட்ட செயல்முறையில் போதுமான தகவல்களை வெளியிடாத காரணத்தினால் முடீஜ புள்ளியில் 47 ஐப் பெற்றிருந்தது. மாறாக உக்ரேன் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. கடந்த மூன்று கணக்கெடுப்புக்களில் அது முடீஜ புள்ளிகளில் வேகமாக முன்னேறி வருகின்றது. 2019 இல் உக்ரேனின் புள்ளி 61 என்ற வரம்பைக் கடந்துள்ளது. இந்த மாற்றங்கள் நிகழ்ந்த காலப்பகுதியில் இலங்கையை விட உக்ரேனின் தனிநபர் மொ.உ.உ பின்தங்கியிருந்தாலும் அந்நாட்டின் வரவு செலவுத் திட்ட வெளிப்படைத்தன்மைகளில் இந்த முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன.




*மூலம்: உலக வங்கி தரவு*

உக்ரேனின் வரவு செலவுத் திட்ட வெளிப்பாடுகளின் முன்னேற்றங்களுக்கு அந்நாட்டு அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொது நிதியில் நிகழ்ந்த விரிவான மறுசீரமைப்புக்களைக் காரணமாகக் கூறலாம்.[9] உக்ரேன் நிதியமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பொது நிதி முகாமைத்துவ முறை மறுசீரமைப்பு மூலோபாயம் 2017 – 2020, பல விடயங்களைக் கவனத்தில் கொண்டதுடன் அதில் ஒன்று வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை மேம்படுத்துவதாகும். மறுசீரமைப்பின் பிற கூறுகள் நிதி ஒழுக்கம், வளங்களை பயனுள்ள வகையில் ஒதுக்கீடு செய்தல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தை செயல்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளை உள்ளடக்கியது.[10]

இந்த விடய ஆய்வு அரசாங்கத்தின் விரிவான முயற்சியினால் பொது நிதியை மேம்படுத்துவதற்கான திறனை எடுத்துக் காட்டுகின்றது. உக்ரேனில் பொது நிதி மறுசீரமைப்பு மூலோபாயம் மூலமாகத் தீர்க்கப்பட்ட அனைத்து விடயங்களிலும் காணப்படும் குறைபாடுகளை பொது நிதி பற்றிய குழுவும் (COPF) அதன் அறிக்கையில் எடுத்துக் காட்டுகின்றது. எனினும் கடந்த காலங்களில் இலங்கையின் முடீஜ புள்ளிகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் போன்று இலங்கையின் பொது நிதி மறுசீரமைப்பின் முன்னேற்றமும் மிகவும் மெதுவாக உள்ளது.

9 சர்வதேச வரவு செலவுத் திட்ட கூட்டு (2019), திறந்த வரவு செலவுத் திட்ட கணக்கெடுப்பு அறிக்கை, https://www.internationalbudget.org/sites/default/files/2020-04/2019_Report_EN.pdfஇல் கிடைக்கிறது

10 நிதி அமைச்சு, உக்ரைன் (2017), பொது நிதி மேலாண்மை அமைப்பு சீர்திருத்த மூலோபாயம் 2017-2020, https://www.mof.gov.ua/storage/files/f0c37541b6bc06c-cae09b784d802dc9d.pdf இல் கிடைக்கிறது

ISBN 978-624-5514-15-1

Verité Research
Strategic Analysis for Asia

A | No. 5A, Police Park Place, Colombo 5
T | +94 11-2055544
E | reception@veriteresearch.org
W| www.veriteresearch.org